Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 141

ஞாயிற்றுக்கிழமை 16 ஏப்ரல் 2023

சித்திரை 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

பாதிக்கப்பட்ட தமிழர்கள்

# உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவளிக்கத்தான் வேண்டும்



## அதை எதிர்க்கும் கருத்துக்களைப்பற்றி அலட்டிக்கொள்ள விரும்பவில்லையாம்

ஜனாதிபதி ரணில் எகத்தாளம்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 16**

**உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு - உள்ளகப் பொறிமுறைக்கு - பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆதரவளித்தேயாகவேண்டும். இதை எதிர்க்கும் கருத்துக்கள் தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

»15

## குறிகாட்டுவான் நுழைவாயிலில் கடற்படையால் அரச மரம்

புத்தர் சிலை வைப்பதற்கான முன்னேற்பாடா எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஏப். 16
கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள குறிகாட்டுவான் துறைமுகத்தில் அரச மரம் வைக்கப்பட்டுள்ளது. புத்தர் சிலை வைப்பதற்கான முன்னேற்பாடாக இது வைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

»15

உதவிப்பொதிகளை

## இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து வழங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், ஏப். 16
இந்தியாவின் உதவிப்பொதிகளை வடக்கில் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் பங்கேற்றுள்ளனர்.

»15

## பண்ணையில் அம்மன்சிலை அகற்ற பொலிஸார் முயற்சி

## நல்லை ஆதீன முன்றிலில் உண்ணாவிரதப்போராட்டம்

விரிவுகள்:- பக் - 15 இல்

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் வேகமெடுக்கும் கோரோனா?

நேற்றும் மூவர் தொற்றுக்களுடன் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுடன் 3பேர் நேற்று அடையாளம் காணப்பட்

»15

## முகக்கவசங்களை அணியுங்கள்

போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாணத்தில் கடந்த ஒருவாரத்தில் 4 பேர் கொரோனாத் தொற்றுடன் அடை

»15



கனேடியத் தம்பதியர் மீதான தாக்குதல்:

## 2 மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் கைது

தாக்குதலுக்கான காரணமும் வெளியானது

யாழ்ப்பாணம், ஏப். 16
தனிப்பட்ட பகைமை காரணமாக கனடாவிலிருந்து வழங்கப்பட்ட பணத்துக்காகவே அனலைதீவில் தங்கியிருந்த கனேடிய வயோதிபத் தம்பதியர் மீது தாக்குதல் நடத்தி பணம் மற்றும் நகையைக் கொள்ளையடித்தோம் - இவ்வாறு சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர்கள் விசாரணையில்

»15

## இன்ரபோலிடம் உதவி கோரல்



யாழ்ப்பாணம், ஏப். 16
அனலைதீவில் தங்கியிருந்த தம்பதிகள் மீதான தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் கனடாவில் இருப்பதால் அவர்களைக் கைது செய்வது தொடர்பில்

»15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யாழ்ப்பாணத்தில் பரவலாக

# தென்னை மரங்களில் நான்கு வகை ஈக்கள்



## தெங்கு உற்பத்தி மந்தம்

கொழும்பு, ஏப். 16

**தென்னை மரங்களில் வெள்ளை ஈ பரவல் காரணமாக உற்பத்தித் திறன் குறைந்துள்ளது. இதுவரை நான்கு வகையான வெண்ணிற ஈக்களின் தாக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து தெங்கு ஆராய்ச்சி நிலையப்பிரதிப் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்ததாவது:- இலங்கையில் முதல்தடவையாக இந்த வெண்ணிற ஈயின் தாக்கம் தென்னை மரங்களில் பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணம், களுத்துறை, கம்பஹா, திருகோணமலை, கொழும்பு, குருநாகல், கண்டி, காலி, மாத்தறை, இரத்னபுர, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த வெண்ணிற ஈ தாக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தாக்கம் காரணமாக தெங்கு உற்பத்தித் திறன் வெகுவாகக் குறைந்துள்ளது.

> **வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லாதுவிடின் இது பெரும் அழிவை ஏற்படுத்தும்.**

இந்த வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லாதுவிடின் இது பெரும் அழிவை ஏற்படுத்துவதுடன் தேங்காய்களுக்குப் பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)

## அம்மன் நகைகளை திருடிய பூசகர் கைது

சாவகச்சேரி, ஏப்.16

பூசகரைச் சந்திப்பதற்காக ஆலயத்துக்குள் சென்ற பிறிதொரு பூசகர், அம்பாளின் கழுத்தில் காணப்பட்ட தங்கநகைகளை அபகரித்துச் சென்றுள்ளார். இந்தத் திருட்டுச்சம்பவம் சங்கத்தானையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஆலயத்துக்குள் பொருத்தியிருந்த சி.சி.ரி.வி. பதிவுகளை வைத்து நகைகளைத் திருடியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் நகையை விற்பனை செய்தபோது அதை வாங்கியவரையும் பொலிஸார் கைதுசெய்து நகைகளை மீட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-14-9)



## கிளிநொச்சி – அக்கராயனில்

## பயிர்ச்செய்கைக்கு காணியை பகிர்ந்தளிக்க நடவடிக்கை!

கிளிநொச்சி, ஏப்.16

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் - ஸ்கந்தபுரம் கிராமத்தில், பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக பொதுமக்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. கலந்துரையாடலின்போது கரும்புத்தோட்ட காணிகளை பிரதேச மக்களுக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பயன்படும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில், 10 ஏக்கர் காணியை முயற்சியாளருக்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதுடன் 3 ஏக்கர் காணியை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு பொருத்தமான 146 ஏக்கர் காணிகளை குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த காணிகள் அற்ற மக்களுக்கு காணிக் கச்சேரி ஊடாக பகிர்ந்தளிப்பதாகவும் முடிவு எட்டப்பட்டது. (ம-14-113)

## வலி.மேற்குப் பகுதியில்

## புத்தாண்டு வியாபாரத்துக்கு ஒருதலைப்பட்சமாக அனுமதி

### பிரதேசசபை செயலர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 16

சங்கானை சந்தைக் கட்டடத் தொகுதியின் முன்பாக, வருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு, சில தற்காலிக வியாபார நிலையங்களுக்கு ஒருதலைப்பட்சமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வலி.மேற்கு பிரதேசசபையின் செயலாளர் மீது குற்றஞ்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சங்கானையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் முன்பாக, கடந்த தைப் பொங்கல் தினத்துக்கு அமைக்கப்பெற்ற பந்தல் வியாபார நிலையங்கள் செயலாளரால் அகற்றப்பட்டன.

ஆனால், தற்பொழுது பிரதேசசபைகளின் ஆட்சிக்காலம் முடிவடைந்த நிலையில் சங்கானை பழைய சந்தையில் பந்தல் வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

'வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் செயலாளரால் புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் ஒருதலைப்பட்சமாக இந்தமுறை சில வியாபார நிலையங்களுக்கு மாத்திரம் பந்தல் அமைக்கவும் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது' என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலி. மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நடனேந்திரனிடம் வினவிய பொழுது, கடந்த பொங்கல் விழாவுக்கு தரிப்பிட வசதிகளைக் காரணமாகக் குறிப்பிட்டு வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டன எனத் தெரிவித்தார்.

அதன்பின்னர் வலி.மேற்கு பிரதேசசபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இதற்கான பதிலை மேலதிகாரியின் அனுமதியின்றி வழங்கமுடியாது எனத் தெரிவித்தார். (ம-14-125)

## தந்தை செல்வா நினைவும் சான்றோர்கள் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஏப். 16

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வு, வலி.மேற்கு பிரதேசசபையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தின் தலைவருமான ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் அதிபர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் எனப் பலரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளதுடன், உதயன் பத்திரிகைக்கு சிறப்பு விருதும் வழங்கப்படவுள்ளது. (ம-14)

## வடக்கின் நிலப்பகுதிகளை சீனாவுக்கு வழங்கக்கூடாது

### கரைச்சி பொதுஅமைப்புக்கள் அழுத்தம்

இரணைமடு மற்றும் இயக்கச்சியில் சுமார் 700 ஏக்கர் நிலப்பகுதியை சீனாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று கரைச்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் கருப்பையா ஜெயக்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் சீனாவிடமிருந்து வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாமல் இரணைமடுக் குளத்தின் தெற்குப் புறமாகவுள்ள பகுதியில் 500 ஏக்கர் வனப்பகுதியையும், இயக்கச்சியை அண்டிய பகுதியில் 200 ஏக்கர் காணிகளையும் சீனாவுக்கு வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டால் அது வடமாகாண மக்களை நேரடியாகப் பாதிக்கும்.

வடக்கு மாகாணத்தின் இதய பகுதியாக இருக்கின்ற இரணைமடுக் குளத்தின் தெற்காகவுள்ள 500 ஏக்கர் காணிகளை சீனாவுக்குக் கொடுத்தால், அங்கு எதிர்காலத்தில் சீனர்கள் குடியிருப்பார்கள். அவர்கள் தமது வணிக, ஆய்வக நிலையங்களை அங்கு நிறுவுவார்கள்.

எனவே இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் செயற்பாடுகள் குறித்து அச்சப்படுகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், காணிகள் இல்லாமல் உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றனர். அதேபோன்றுதான் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்திலும் இருக்கின்றார்கள். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணி இல்லாமல் வாழ்கின்ற சூழல் இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு காணிகளைக் கொடுப்பதற்கு முன்வராத அரசாங்கம், சீனாவுக்கு கொடுக்க நினைப்பதானது எமக்குப் பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றது - என்றார். (ம-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாகாணசபைத் தேர்தலுக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம்!

*பிரிட்டனிடம் வலியுறுத்தியது ரெலோ*

லண்டன், ஏப். 16

இலங்கையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்காக பிரிட்டன் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று ரெலோ அமைப்பு பிரிட்டன் வெளிவிவகார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் கிளைத் தலைவர் சாம் சம்பந்தனை, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் கூட்டத்தில் உள்வாங்க வேண்டிய பல முக்கியமான விடயங்கள், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான விடயங்கள், நில அபகரிப்பு, தொல்பொருள், வன இலாகா, பாதுகாப்பு அமைச்சு ஊடாக வடக்கு - கிழக்கில் தமிழ் இனத்தின் இனப்பரம்பலை குறிவைத்து மேற்கொள்ளப்படும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள், கடந்த நான்கு வருடங்களாகத் திட்டமிட்டு இழுத்தடிப்பு செய்யப்படும் மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல், தனது அரசமைப்பையே மீறி செயற்படும் அரசின் செயற்பாடுகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டன என்று ரெலோ அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-14)

# பயங்கரவாத சட்டவரைவை அமெ. எதிர்க்கவேண்டும்

*சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து*

**கொழும்பு, ஏப். 16**

**இலங்கை மக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்ப்பை வெளியிட்டு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசியாவுக்கான இயக்குநர் கரொலின் நாஸ் தெரிவிக்கையில்;

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மனித உரிமையின் அனைத்து அளவுகோல்களிலும் தோல்வியடைந்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அல்லது மோசமான சட்டத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் உத்தேச சட்டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டுவரவில்லை.

பல தசாப்தகாலங்களாக மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல்கொடுத்துவந்துள்ள இலங்கையின் சிவில் சமூகத்தை ஒடுக்கும் முகமாக இந்த உத்தேச சட்டவரைவு கொண்டுவரப்படுகிறது. இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அல்லது முற்றாகக் கைவிடவேண்டும். இலங்கை மக்களின் உரிமைகளை முக்கியமானவையாகவும், பெறுமதிமிக்கவையாகவும் கருதி, புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்க்க அமெரிக்கா அவதானம் செலுத்த வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்தச் சட்டத்துக்கு தனது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உடன் கைவிடப்பட வேண்டும்!

*லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 16

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு சர்வதேச சமூகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. எனவே, குறித்த சட்டவரைவை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று எதிரணி பிரதம கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச பயங்கரவாதத்தை வலுப்படுத்தும் வகையிலேயே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சர்வதேச மட்டத்தில் இருந்தும் எதிர்ப்புகள் வலுத்துள்ளன. இதனால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும். தேசிய மட்டத்திலும் சட்டவரைவு தொடர்பில் சிக்கல் உள்ளது. எனவே, அரசு உடனடியாக சட்டவரைவை மீளப்பெறவேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த சட்டவரைவு தயாரிக்கப்படவில்லை. தனக்குத் தேவையான சட்டத்தரணிகளைப் பயன்படுத்தியே அரசு இதனை செய்துள்ளது. 20ஆவது திருத்தச்சட்டத்திலும் இப்படித்தான் நடந்தது. நாம் நீதிமன்றத்தை நாடுவோம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் - என்றார். (ம-14,44)

## தலைமை தொடர்பில் பெரமுனவில் குழப்பம்

கொழும்பு, ஏப். 16

பொதுஜன பெரமுனவின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் அந்தக் கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பெரமுனவின் தற்போதைய தலைவராக மஹிந்த ராஜபக்ச செயற்படுகின்றார். செயற்பாட்டு அரசியலுக்கு விடைகொடுக்கும் நிலைப்பாட்டிலேயே அவர் இருக்கின்றார். அத்துடன், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்சியைத் தயார்படுத்தும் விதத்திலுமே மஹிந்த ராஜபக்ச இந்த முடிவை எடுத்துள்ளார். அந்த வகையில் கட்சியின் ஸ்தாபகரும், தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்சவை தலைவராக்க வேண்டும் என ஒரு தரப்பினரும், நாமல் ராஜபக்சவுக்கு தலைமைத்துவத்தை வழங்கவேண்டுமென மற்றுமொரு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள் முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது. பெரமுனவின் விசேட கூட்டமொன்று விரைவில் நடைபெறவுள்ளது. இதன்போது இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (ம-14,44)

## தேர்தல்கள் அனைத்தும் 2024இல் நடைபெறுமாம்!

கொழும்பு, ஏப். 16

2024 ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் வருடமாக அமையும் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அதன்படி 2024 ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. முதலில் உள்ளூராட்சிசபைத் தேர்தலும், அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறும் எனவும், அதன்பின்னரே ஏனைய தேர்தல்கள் குறித்து முடிவெடுக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது. (ம-14,44)

## குரங்கொன்று ரூ.50ஆயிரம்?

இலங்கையிலுள்ள குரங்கொன்றுக்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் சீன அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்தப்போவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவிலுள்ள மிருகக்காட்சிசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கே கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் இலங்கையிலுள்ள குரங்கொன்றை பிடிப்பதற்கும், அதனைச் சீனாவுக்கு கொண்டு செல்வது வரையான அனைத்து செலவினங்களையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குரங்குகளைப் பிடித்து, அதனைத் தனிமைப்படுத்தி, நோய்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்ந்து, கூடுகளில் அடைத்து, சீனாவுக்கு கொண்டு செல்வதற்கான முழுச் செலவையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் விளக்கம் அளித்துள்ளார். (அ-ஒ.இ)




இந்தியப் படைகளால் தமிழர் தாயகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட போரையும், அடாவடிகளையும் நிறுத்த வலியுறுத்தி மட்டக்களப்பு மண்ணில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் [illegible] தன் உயிரையே ஆகுதியாக்கிய அன்னை பூபதிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 22 . 02 . 1942

உதிர்வு 17 . 03 . 2023



அமரர் திரு.

## கதிர்காமு பாலசுப்பிரமணியம்

எம்மைவிட்டு மறைந்தாலும் நீங்காத நினைவுகளாக எம் உள்ளத்தில்
எப்போதும் எம்முடனே இருப்பீர்கள் பாலா மாமா

சீர் பெருகு சுப கிருது வசந்த பங்குனி திங்கள் தனில்
வெண் நிலவும் அபர பக்க தசமி வெள்ளியன்று
செட்டி வம்சவழி வந்த நுண் கலைகளும் தேற்சி பெற்ற பாலசுப்பிரமணியம்
இணுவையம்பதி ஸ்ரீ பரராஜசேகரனின் காலடி சேர்ந்தான்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்று கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமாகவும் மின் அஞ்சல், சமூக ஊடகங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், மற்றும் ஏனைய வழிகளில் எமக்கு உறுதுணையாக நின்றவர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும், எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

(CS/ 49968)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 01 . 1934

மறைவு 12 . 04 . 2023



## சின்னையா சிவகுருநாதன்

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவகுருநாதன் கடந்த (12.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா நாகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமியின் அருமைக் கணவரும், தயாறஞ்சினி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சிவகுமாரன் (ஜேர்மனி), சிவரூபன் (அமரர்), பத்மறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விக்கினேஸ்வரி (ஜேர்மனி), நந்தராஜன் (அலுவலகப் பணியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனாரும், பவிதா, சஜிதா, அகிசன் ஆகியோரின் செல்லப் பேரனும், விஜயலட்சுமி, சுந்தரலிங்கம், பூபதி, சிவபாக்கியம், செல்வரட்ணம் ஆகியோரின் பட்சமுள்ள சகோதரனும், பாலசிங்கம், பரிமளகமலேஸ்வரி, சுப்பிரமணியம், பத்மநாதன், ஜெகதீஸ்வரி, பூபதியம்மா, கந்தசாமி (அமரர்), தவராசா (அமரர்), விஜயரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தொடர்பு :
+ 947 7951 7613
+ 947 6801 7780
+ 947 7470 7119

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 24465) (N-15)

# மரண அறிவித்தல்

## திருமதி வின்ரன் சிவபாக்கியம்

நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்
11 தீமோ 4:7



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், யாழ். சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வின்ரன் சிவபாக்கியம் கடந்த (12.04.2023) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற எல்பட்கனகு வின்ரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்டன், சுவேந்தினி மற்றும் சாந்தினி, இன்பம், ராகினி, தேவராணி, சுதர்சினி, செலஸ்ரீன், தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, பரராஜசிங்கம், திருகேதீஸ்வரன், ரவிசங்கர், ஈசன், சட்குணராசா, பர்த்தன், டொரின், மன்மதகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியாரும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (17.04.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தோற்றம் 25.03.1948

மறைவு 12.04.2023

78, குருகோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 104 3101

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழர்கள் வேண்டிநிற்கும் உதவி

'யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட முதலாவது இந்தியப் பிரதமர் நானே' என்று தெரிவித்துள்ள நரேந்திர மோடி, 'இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் உதவிக்காகக் காத்திருந்தனர். எங்கள் அரசாங்கம் அவர்களுக்கு ஏராளமான உதவிகளைச் செய்துள்ளது' என்றும் புளகாங்கிதம் கண்டிருக்கின்றார். நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டதையோ அல்லது இந்திய அரசாங்கம் இலங்கைக்குப் பல்வேறுபட்ட உதவித் திட்டங்கள் வழங்கியதையோ மறுப்பதற்கில்லை. ஆனால், இந்த உதவிகள் தமிழர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்தனவா? அல்லது தமிழர்களுக்கான உதவியென்று எதை இந்தியா வரையறுத்திருக்கின்றது? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.


கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக, அதாவது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளும், நெருக்குவாரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் தமிழர்களின் அரசியல் உரிமையை, தம்மைத்தாமே ஆள்கின்ற உரிமையை வலியுறுத்தியே இடம்பெற்றது. மாறாக அந்தப்போர் அபிவிருத்தியை மையப்படுத்தியதல்ல. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரும் இன்றளவும் தமது ஜனநாயக உரிமைக்கான தமிழர்களின் போராட்டம் தொடரவே செய்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், 'பிராந்திய வல்லரசு' என்ற எண்ணப்பாட்டில் இருக்கும் இந்தியா, தமிழர்களின் நிலைசார்ந்த சிந்தனையை, செயற்பாட்டை எவ்வளவு தூரம் நேர்த்தியாக ஆற்றியிருக்கின்றது? என்ற சுயபரிசீலனை அந்த நாட்டுக்கு அவசியம் தேவை.

'13'ஆவது திருத்தத்தை இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த நாடு இந்தியாதான். ஆனால், இந்தத் திருத்தத்தை இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியாவால் முடியவில்லை. '13'ஆவது திருத்தம் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிருகின்றது (?). ஆனால், மாகாணசபைகளின் ஆயுள் காலம் முடிவடைந்து இன்று பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் அதற்குரிய புதிய தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கடந்த சில மாதங்களுக்கு ஆயுள்காலத்தை இழந்த உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு காட்டப்படும் ஈடுபாட்டில் பாதிகூட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு காட்டப்படவில்லை. குறைந்த பட்சம் எதிர்க்கட்சிகள்கூட இதற்குரிய வலியுறுத்தல்களை அவ்வளவாக முன்வைக்கவில்லை. ஆக, பிராந்திய வல்லரசு என்ற பிரமையில் நிற்கும் இந்தியா, கொழும்பின் காய்நகர்த்தலில் கனகச்சிதமாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், பிரதமர் நரேந்திரமோடி தனது கருத்து எவ்வளவுதூரம் யதார்த்த முரணானது என்ற புரிதலை – சிந்தனையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

தமிழர்களின் போராட்டமும் உயிர்த்தியாகங்களும் அரசியல் உரிமைகளை மையப்படுத்தியவையே அன்றி அவை இந்திய வீட்டுத்திட்டங்களையோ, நிவாரணங்களையோ மையப்படுத்தியவை அல்ல. பிரதமர் நரேந்திர மோடியும், பாரதிய ஜனதா அரசாங்கமும் இலங்கை மக்களின் நலனில் அக்கறை கொண்ட தரப்புக்களென்றால், தமிழர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியும், கொழும்பை மையப்படுத்திய பிராந்திய (கேந்திர) முக்கியத்துவம் கருதிய நகர்வுகளை இரண்டாம் பட்சமாகக் கொண்டும் செயலாற்றுவதற்கு – ஆத்மார்த்தமான தீர்வொன்றைத் தமிழர்களுக்கு வழங்குவதற்குத் தயாரா? யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஒரேயொரு இந்தியப் பிரதமரான மோடி, இங்குள்ள களநிலைவரங்களை பார்த்தறிந்துள்ளார். அந்த அனுபவமும் அவதானிப்பும் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வொன்றை நோக்கிய பயணத்துக்காக மோடியை உந்தித்தள்ளவேண்டுமல்லவா? 'இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் எங்கள் உதவிக்காகக் காத்திருந்தனர்' என்று தெரிந்துவைத்திருக்கும் மோடி, அவர்கள் காத்திருக்கும் உதவி எத்தகையது என்று தெரியாமல் இருப்பது ஆச்சரியம்தான்.

### நாளொரு நல்வார்த்தை

"அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் என்று ஒன்று இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்"
– அறிஞர் அண்ணா




### தனியார் கடன் வழங்குநர்களால்

# இலங்கை அரசாங்கத்துக்கு கடன் சீரமைப்பு யோசனை!

**கொழும்பு, ஏப். 16**

**சர்வதேச தனியார் கடன்வழங்குநர்கள் குழுவொன்று இலங்கை அரசாங்கத்துக்கு கடன்மறுசீரமைப்பு திட்ட யோசனையொன்றை அனுப்பி வைத்துள்ளது.**

12 பில்லியன் பிணைமுறிகள் தொடர்பிலேயே இந்த யோசனையை சர்வதேச தனியார் கடன்வழங்குநர்கள் அனுப்பிவைத்துள்ளனர். இலங்கை தனது கடனைச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட பின்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ள முதலாவது யோசனை இது. அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக இது காணப்படுகின்றது. எனினும் கடன்யோசனைகளில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. இந்தத் தனியார் குழுவில் 30 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. (ம-இ)

## இலங்கையுடன் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பமாகும்

### பரிஸ் கிளப் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 16

கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கையுடன் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பரிஸ் கிளப் அறிவித்துள்ளது.

இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பதற்காக ஜப்பானின் தலைமையில் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே இலங்கையின் கடன்கள் தொடர்பில் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயார் என்றும் அதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றும் பரிஸ் கிளப் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது, நியாயமான கடன்சுமைப் பகிர்வு மற்றும் பொருளாதார மீளெழுச்சி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று பரிஸ் கிளப் மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

## திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில்


கொழும்பு, ஏப். 16

90 மில்லியன் ரூபா மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள் ஏலத்துக்கு விடப்படவுள்ளன என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வு காலத்தை கெண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலத்தில் விற்கப்படவுள்ளன. இந்த ஏல விற்பனை எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச-இ)

**நாளை** 17.04.2023
**திங்கட்கிழமை**
**சித்திரை 04**
சுபநேரம் : 12.04 – 01.34
ராகுகாலம் : 07.34 – 09.04
**பிரதோஷவிரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03 மணிக்கு சோபகிருது புத்தாண்டு வழிபாடுகள் பக்திபூர்வமாக இடம்பெற்றன. (ம-14)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ம-14)



## ஆதி விநாயகர் தேர்த் திருவிழா

வவுனியா, ஏப். 16

வவுனியா வைரவப்புளியங்குளம் ஸ்ரீ ஆதிவிநாயகர் திருக்கோவிலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை புத்தாண்டு விசேட பூசைகள் இடம்பெற்றன. தொடர்ந்து ஆதி விநாயகப் பெருமான் அடியவர்கள் புடைசூழ தேரில் ஆரோகணித்தார்.

பக்தர்கள் காவடி, தீச்சட்டி, அங்க பிரதிஷ்டை உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். இதேவேளை- சோபகிருது தமிழ் புத்தாண்டை வரவேற்கும் விதமாக வவுனியாவிலுள்ள ஏனைய இந்து ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-18)



குப்பிழான் சிவபூமி ஆச்சிரமத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03 மணிக்கு சோபகிருது வருடப்பிறப்பு விசேட பூசை வழிபாடு நடைபெற்றது. (ம-14-66)



தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் விநாயகர் சிலையொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்கவின் பங்குபற்றலுடன் பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. (ம-14-113)



## இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 16

இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் முகமாக யாழ். கிளிநொச்சி மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு யாழ். ஸலாமிய்யா அரபுக் கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ். கிளிநொச்சி மக்கள் பணிமனை தலைவர் மௌலவி ஏச்.சுபியான் தலைமையில் நடைபெற்றது. (ச)

## புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 16

கைதடி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி நடத்திய சமுர்த்தி அபிமானி புத்தாண்டுச் சந்தை கைதடி பொதுச் சந்தை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சமுர்த்திப் பயனாளிகளால் தயாரிக்கப்பட்ட தைத்த ஆடைகள், உள்ளூர் உணவுப் பொருள்கள், கடல் உணவுப் பொருள்கள், கைத்தொழில் பொருள்கள் என்பன இந்தச் சந்தையில் நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டன. (ச-159)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் வடமாகாணத்திலுள்ள 500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 125 குடும்பங்களுக்கும், மன்னாரில் 100 குடும்பங்களுக்கும், கிளிநொச்சியில் 75 குடும்பங்களுக்கும், வவுனியாவில் 100 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவில் 100 குடும்பங்களுக்கும் என மேற்படி உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-14)

## சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் புத்தாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 16

சுழிபுரம்மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தால் சித்திரை புதுவருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள், கழகத்தின் உபதலைவர் சி.கிரிசாந் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.


மரதன் ஓட்டப்போட்டி, முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல் போன்றவற்றோடு சிறார்களுக்கான விசேட விளையாட்டுக்களும் இடம்பெற்றன. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் அன்றையதினம் மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பரிசளிப்பு விழாவின்போது கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-14-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூநகரி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றன. (ய-9)




கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு 'இளைஞர் எதிர்காலம் இன்றே' என்ற அமைப்பின் நிதி அனுசரணையில் கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்றது. (ய-159)



வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் சு.செந்தூர்ச்செல்வன் 36 வருட மதுவரி சேவையிலிருந்து கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி இளைப்பாறியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி வடமாகாணத்திலுள்ள அனைத்து மதுவரி நிலையங்களின் சார்பில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது. (ய-9)




கிளிநொச்சி - பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வுப்போட்டி கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (ய-113)



கரைச்சி பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் கிராமஅலுவலர் பிரிவிலுள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்கள் 436 பேருக்கு பத்து கிலோ அரிசி கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்பட்டது. (ய-113)



கீரிமலை வலித்தூண்டல் பாடசாலையின் கால்கோள் விழாவில் கனடாவைச் சேர்ந்த மிட் லன் மீடியா நிறுவன ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரனால் மாணவர்களுக்கு புத்தகப்பைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய)



தென்மராட்சி பிரதேச மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் ஆரம்ப நிகழ்வு பிரதேசசெயலர் உஷா சுபலிங்கத்தின் தலைமையில் கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. (ய-9)

யாழ். குருநகர் புனித றோக்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (ய-20)






நூலக நிறுவனத்தால் நடத்தப்பட்ட புகைப்பட ஆவணமாக்கல் பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை [illegible] அமைந்துள்ள நூலக நிறுவனத்தில் இடம்பெற்றது. (ச-159)



இராமநாதபுரம் மகா வித்தியாலய மெய்வன்மை திறனாய்வுப் போட்டி கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (ய-113)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
இந்த உற்சவத்தில் ஈழத்தின் புகழ் பூத்த நாதஸ்வர தவில் கலைஞர்களின் விசேட கச்சேரியும் இடம்பெற்றது. (ய)



பல்வேறு செயற்றிட்டங்களுக்கென சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நிதியுதவி வழங்கப்பட்டது. இந்த நிதியுதவியை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் இணைந்து அந்தந்த நிர்வாகங்களிடம் கையளித்தார். (ச-66)



யோகர்சுவாமியின் 59 ஆவது குருபூசைத் தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்புத்துறையிலுள்ள அவரது சமாதி கோயிலில் இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ்நாடு கும்பகோணத்தைச் சேர்ந்த செந்தமிழ் ஆகம அந்தணர் இறைநெறி இமையவன் 'சமய வாழ்வியல்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (ச-66)



வரலாற்றுச் சிறப்புடைய திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-40)





## பெண் பணியாளர் தேவை

புத்தக விற்பனை நிலையமொன்றிற்கு பெண் பணியாளர் தேவை
இடம்: 204. சேர் பொன் இராமநாதன் வீதி. திருநெல்வேலி (யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக) 077 128 5749

## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளியில் சிறிய குடும்பமொன்றிற்கு வீடு வாடகைக்கு உள்ளது. அத்துடன் அறைகளும் வாடகைக்கு உண்டு.
0777 24 24 27 ,0777 41 27 13

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ் நகரிற்கு அண்மையாக உள்ள 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 8246 113

## தென்னந்தோட்டப் பணியாளர்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் குடும்பமாகத் தங்கி நின்று வேலைசெய்வதற்கு பணியாளர்கள் தேவை. ட்ரக்டர் ஓட்டத் தெரிந்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.
077 651 0696 / 077 303 8787

## SALES EXECUTIVE - OFFICE BASED

A unique and ambitious Software company based in Jaffna, Colombo, and London is seeking **Sales Executives**

* Engergetic male & female candidate.
* Good communication skills.
* Training provided.
* Basic salary + Monthly commission Rs 1 Lakhs+
* Age above 21.

Please apply via email to **anushiya@visualbusinessretail.com**
Closing Date: **31st May 2023**

**VBR Asia Pvt Ltd**
KKS Road, Chunnakam,
Jaffna-Sri Lanka
www.visualbusinessretail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கப்பட்ட கதைகள்



நீதி அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் பதவி வகித்த சரத் அமுனுகம தனது சுயசரிதையை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இரண்டாவது தொகுதியிலிருந்து ஒரு பகுதியை எடுத்து Ilsland பத்திரிகை Violence in Jaffna and my departure from government service என்ற தலைப்பில் கடந்த வாரம் பிரசுரித்துள்ளது. இளைய தலைமுறையினருக்கு தெரியாத பல விடயங்கள் முக்கியமான விடயங்கள் அந்தக்கட்டுரையில் பிரசுரமாகியுள்ளன உதயன் வாசகர்களுக்காக அந்தக்கட்டுரையில் பிரசுரமாகியுள்ள முக்கியமான விடயங்கள் இங்கு தமிழில் தரப்பட்டுள்ளன.

○ தமிழில்: ந.பரமேஸ்வரன்

தமிழர் விடுதலைக்கூட்டணி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து கொண்டிருந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளால் வேலைவாய்ப்புக்கு சிங்கள அரசாங்கத்தை நம்பியிருக்கமுடியாது என எண்ணிய வடபகுதி இளைஞர்கள் வன்முறையை நாடினர். பலஸ்தீன விடுதலை இயக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு வடபகுதி இளைஞர்களும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் நோக்குடன் ஆயுதப் பயிற்சி பெறுவதற்காக லண்டனிலிருந்த பலஸ்தீன விடுதலை இயக்கப்பிரதிநிதிகளை அணுகினர். இந்த விடயத்தை பல வருடங்களின் பின்னர் டக்ளஸ் தேவானந்தா என்னிடம் கூறியுள்ளார். இந்த நேரத்தில் இந்திரா காந்தி , 'றோ' அதிகாரிகளை அனுப்பி , தமிழ் இயக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தினார். எமது (இலங்கையின்) பலவீனமான புலனாய்வுக் கட்டமைப்புக்கு இந்த விடயம் தெரிந்திருக்கவில்லை. அதே போல் ஹமீதின் கீழ் இருந்த வெளிவிவகார அமைச்சும் தமது மத்திய கிழக்கு சகோதரர்களைப் புண்படுத்த விரும்பவில்லை. இவை யாவும் ஜே.ஆரின் முட்டாள்தனமான முடிவுகளால் ஏற்பட்ட விளைவுகள். யாழ்ப்பாண மக்களின் மனங்களை வெல்லும் நோக்குடன் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள், மற்றும் பல்லின மாணவர்கள், அதிகாரிகள் என்போரை உள்ளடக்கிய குழுவொன்று லயனல் பெர்னாண்டோ தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது. லயனல் பெர்னாண்டோ பிரபலமான அரசாங்க அதிபர். யாழ்ப்பாணத்தில் தனது தாயாருடன் வசித்து வந்தார். அவரது தாயார் காலமான போது யாழ்ப்பாண மக்கள் ஓர் உணர்வுபூர்வமான பிரியாவிடையை அவருக்கு வழங்கியிருந்தனர். லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாண மக்களின் மனங்களை வெல்வார் என்ற நம்பிக்கையில் இந்தக் குழு அனுப்பப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட லயனல் பெர்னாண்டோவுக்கு எதுவித அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பையும் மீறி லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார்.

யோகேந்திரா துரைச்சாமியை இடமாற்றம் செய்வதற்காகவே இவ்வளவும் நடைபெற்றன. யோகேந்திரா துரைச்சாமி ஒரு வளைந்து கொடுக்காத திறமையற்ற அதிகாரி. இவரது ஆணவமான செயற்பாடுகளால் இவர் யாழ்ப்பாண மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருந்தார். திருமதி பண்டாரநாயக்காவின் காலத்திலும் பிரபல அரச அதிபர் விமல் அமரசேகரவுக்குப்பதிலாக ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் வார விடுமுறை நாள்களில் தனது குடும்பத்தினரின் மடியில் இருக்க ஆசைப்பட்டார்.

திருகோணமலையில் காலியைச் சேர்ந்த ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் திருகோணமலையிலிருந்த சிங்கள முதலாளிகளின் தேவைகளையே பூர்த்தி செய்தார். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் நாசமாக்கினார். பின்னர் அனைத்து இன மக்களினதும் நன்மதிப்பைப்பெற்ற திஸ்ஸ தேவேந்திரா அரச அதிபராக நியமிக்கப்பட்டார். திருகோணமலையின் முக்கியத்துவம் சிறிவர்த்தன போன்ற அதிகாரிகளுக்கு விளங்கவில்லை அவர்கள் கனிஷ்ட அதிகாரிகளை திருகோணமலைக்கு அரச அதிபர்களாக அனுப்பினர். திருகோணமலையின் முக்கியத்துவம் புலிகளுக்குத் தெரிந்திருந்தது அதனால் அவர்கள் திருகோணமலையை தமது தலைநகராக்க விரும்பினர். யுத்தம் நடைபெற்ற காலத்தில் நாங்கள் அங்கு சென்ற போது சுற்றுலாவுக்கான அடையாளங்கள் எதையும் காணவில்லை. பின்னர் நாங்கள் நிலாவெளிக்குச்சென்ற போது அங்கும் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகக்கூறி அவசர அவசரமாக எம்மை வெளியேற்றினர். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை எமது நாட்டின் நவீன வரலாற்றில் ஒரு அசிங்கமான கறையாகும். ஒருவகையில், இரு தரப்பையும் பற்றிக்கொண்ட பகுத்தறிவின்மையின் சக்திவாய்ந்த அடையாளமாக அது அமைந்தது. சிங்களவர்களின் பிம்பத்தில் அதன் நீண்டகால பேரழிவு விளைவுகள் கணக்கிட முடியாதவை. சர்வதேச அபிப்பிராயத்தை ஓர் அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்புவதற்கு, புத்தகங்கள் மற்றும் நூலகங்களை எரிப்பதை விட வலிமையான எதுவும் இருக்கமுடியாது. பிரசாரப் போரில் அது பெரிய 'மைனஸாக 'இருந்தது. யாழ்ப்பாண நூலகத்தின் அழிவு எனக்கும் எனது ஒத்தகருத்துடைய நண்பர்கள் பலருக்கும் மிகுந்த வருத்தத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியது. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதற்கு காமினி திசநாயக்கா தான் காரணர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான எட்வேர்ட் குணவர்த்தன ஒரு பத்திரிகைக் கட்டுரையில் 'அதுவரை தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர்களின் தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்ட பின்னரே பொலிஸார் நடத்திய வெறித்தனமான தாக்குதலில் தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதாகவே சிங்கள மக்கள் நம்பிக்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண நூலகத்தை பொலிஸார் த்தான் எரித்தனர் என்பதன் பின்னால் சிங்கள மக்கள் அதை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வலுவான காரணம் இருந்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் பொலிஸார் தமிழாராய்ச்சி மாநாட்டை குழப்பியிருந்ததுடன் தியாகிகளின் சிலையையும் ட்ரக்கில் கட்டி இழுத்துச் சென்றிருந்தனர். ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றுடன் தொடர்புகளைப்பேணிய அரசியல்வாதிகளை கொலை செய்வதுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் ஆயுதம் ஏந்திய இளைஞர்களுக்கு உற்சாகத்தை அளித்தது .இடதுசாரிகள் கூட விடுபடவில்லை. குடாநாட்டில் இடதுசாரிகள் வலுவான கட்டமைப்பைக்கொண்டிருந்தனர். 1956 ஆம் ஆண்டு பொன் கந்தையா ஒரேயொரு இடதுசாரி தமிழ் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். 1970 ஆம் ஆண்டின் பின் இடதுசாரிகள் யாழ்ப்பாணத்தில் தமது செல்வாக்கை இழந்தனர். அமைச்சரவையில் இருந்த ஒரேயொரு தமிழ் அமைச்சர் கொழும்பில் பொறியியலாளராக இருந்த குமாரசூரியர் மட்டுமே.

அப்போது இருந்த நிலைமை மிக மோசமாக இருந்தது. சமூகங்களை ஒன்றிணைக்க முற்பட்ட சர்வோதயத் தலைவர் கொல்லப்பட்டிருந்தார். இவை எல்லாவற்றுக்கும் பதிலளிக்கும் முகமாக பிரிகேடியர் லலித் வீரதுங்காவை ஜே.ஆர். யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். என்ன விலை கொடுத்தாவது மூன்று மாதங்களுக்குள் வடக்கிலிருந்து பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்க வேண்டுமென லலித் வீரதுங்கவுக்கு எழுத்து மூலமான உத்தரவை ஜே.ஆர். வழங்கியிருந்தார். (இதை பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டுள்ளார் கட்டுரையாளர். மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒரு தலைவர் இராணுவத்துக்கு அதிகாரம் வழங்குவது என்று) கொழும்பில் வாழும் தமிழ் வர்த்தகர்கள் தமது உறவினர்களுக்குப் பயந்து அல்லது அனுதாபத்தால் போராளிகளுக்கு உதவுவதாக சிறில் மத்தியூ குற்றம் சாட்டியிருந்தார். நாங்கள் எமது தமிழ் நண்பர்களுடன் கதைக்கும் போதும் அவர்கள் எங்கடை பெடியள் என்று தான் சொல்வார்கள். ஆக மொத்தத்தில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி வந்தது. தமிழ் நாடாளுமனற உறுப்பினர்களிடம் இருந்த அதிகாரம் இளைஞர்களின் கைகளுக்கு மாறிக்கொண்டிருந்தது. நாட்டைப்பற்றி அக்கறையில்லாத இந்திய விரோதப் போக்கே அப்போதைய அரசிடம் காணப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் உச்சமாக ஜனாதிபதிக்கு மேலாக பிரேமதாஸவை ஆதரிக்கும் நிலை காணப்பட்டது. முக்கியமாக வடபகுதி இளைஞர்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெறுவது பற்றி அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாது அல்லது எதுவும் செய்ய முடியாதிருந்தது. இந்தியாருடே பத்திரிகையில் 'றோ' தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் விடயம் படங்களுடன் வெளிவரும் வரை அரசாங்கத்துக்கு எதுவுமே தெரியாது.

இந்த அனைத்து விடயங்களும் 1983இல் ஒன்றிணைந்தன. ஓர் இராணுவத் தொடரணியில் கண்ணிவெடி வெடித்தது. முன்னெப்போதும் இல்லாத வன்முறை அந்த ஆண்டு ஜூலையில் வெடித்தது. இறந்த இராணுவ வீரர்களின் உடல்களை கனத்தைக்குக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட தாமதம் குறித்து ஜே.ஆரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களுக்கு கூடத் தெரிந்திருக்கவில்லை. இந்தக்கலவரம் து ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியை 19 வருடங்கள் நீடிக்க வழி வகுத்தது. அன்று தொடங்கிய யுத்தம் 30 வருடங்கள் நீடித்தது. இனக்கலவரத்தின் உடனடி விளைவுகளில் ஒன்றாக கொக்காவிலில் இருந்த தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்புக் கோபுரங்கள் போராளிகளால் தகர்க்கப்பட்டன. இதனால் கொழும்பில் இருந்து சமிக்ஞையை பலப்படுத்த வேண்டியிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ மற்றும் ஜே.வி.பி. ஆகிய இரு கிளர்ச்சி களின் போதும் எமது அறிவிப்பாளர்கள் மற்றும் பிரபல கலைஞர்கள் அச்சுறுத்தப்பட்டனர் மற்றும் சிலர் கொல்லப்பட்டனர். ஆனால், இதனையும் மீறி, தமது தொழில் கடமைகளைத் தொடர்ந்த திருமதி இரத்தினம், திருமதி பொன்மணி குலசிங்கம் போன்ற வலுவான வானொலிப் பிரமுகர்கள் இருந்தனர். திருமதி குலசிங்கம் பின்னர் கொல்லப்பட்டார் திருமதி இரத்தினம் மலேசியாவிற்கு குடி பெயர்ந்தார். தொலைக்காட்சி ஆரம்ப நிலையில் இருந்ததால் SLBC ஒரு முக்கியமான ஊடகமாக இருந்தது. நானும் அமைச்சரும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதை மிகவும் கவர்ச்சிகரமான ஊடகமாக மாற்ற ஆர்வமாக இருந்தோம். நான் நியமித்த SLBCயின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளருடன் சில சிரமங்களை எதிர்கொண்டேன். அவர் டி. ராஜேந்திரன், ஒரு மூத்த SLAS அதிகாரி, வைத்தியலிங்கம் துரைசாமியின் மகனாவார். ராஜேந்திரன் நான் முன்னரே குறிப்பிட்டது போல் யாழ்ப்பாணம் அரச அதிபராக இருந்த யோகேந்திரா துரைசாமியின் சகோதரர். SLBC யின் தமிழ்ச் சேவையின் முழுக் கட்டுப்பாட்டையும் அவர் எடுக்க விரும்பினார், அவர் மீது ஊடக வல்லுநர்களாக இருந்த தொலைநோக்குப் பார்வையுடன் இருந்த தொழில் வல்லுநர்களின் கோபம் அதிகமாக இருந்தது. செயலாளராக நான் அவரை தொழில்முறை ஊழியர்களுடன் மிகவும் இணக்கமாக இருக்குமாறு எச்சரித்தபோது, அவர் அதைத் தவறாக எடுத்துக் கொண்டு SLBC சட்டத்தை என்னிடம் மேற்கோள் காட்டத் தொடங்கினார். டி.ராஜேந்திரன் தகராறு செய்யும் வகையைச் சேர்ந்தவர் மற்றும் ஊழியர்களுடன் சிரமங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார். நான் எனது அமைச்சரிடம் பேசி அவரை பணிப்பாளர் சபையிலிருந்து நீக்கினேன். அவர் ஜனாதிபதியிடம் முறையிட்டார் ஆனால் ஜே.ஆர். அவர் சார்பாக தலையிட விரும்பவில்லை. இராஜேந்திரன் ஒரு சோகமான முடிவை சந்தித்தார். அவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அருகில் இந்திய இராணுவச் சிப்பாய் ஒருவருடன் தனது வழமையான கேடான முறையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அந்த இந்தியச் சிப்பாய் அவரை சுட்டுக்கொன்றான். IPKF ஐ தங்கள் சொந்த பாதுகாப்புக்காக நம்பியிருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் அவரது இறுதி ஊர்வலத்தில் கூட கலந்து கொள்ளவில்லை. அவரது மரணம் IPKF நடவடிக்கையின் மறைக்கப்பட்ட கதைகளில் ஒன்றாகும்.

## ஒற்றைப்பார்வை

நிலவு
முற்றத்தில்
நொருங்கிக்கிடக்கிறது

மரங்களில்
வெளிறி உலர்ந்த
இலைகளின்
இடுக்குகளால்
நிலவு கொட்டிச்சரிக்கும்

ஒளித்துண்டங்களை
குழந்தைகள்
பாத்திரங்களில் பொறுக்கி
பெரும் மலையை
கட்டிக்கொண்டிருக்கிறார்கள்

எப்போதும்
குழந்தைகளுக்கு
ஒரு குழந்தையாய்

இருக்கும் நிலவு
பாட்டியின் மடியில்
ஒளியிறகுகளை உதிர்த்திக்
கொட்ட
குழந்தைகளைப் பார்த்து
பாட்டி சொல்கிறாள்
நிலவு வானத்திலென!

கருணை ரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரமௌலீஸ்வரம் எங்கே?

எஸ்.பிரஜீவன்ராம்



இன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலய அழிப்பைக் கண்டித்து இந்து அமைப்புகள் பல குரல் கொடுத்தன. தமிழ் அரசியல்வாதிகளும் இவ் விடயம் தொடர்பில் தமது கண்டங்களைத் தெரிவித்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயப் பிரச்சினைக்கு தமிழர்கள் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என உங்களுக்குள் கேள்வி எழலாம் அதற்கான பதிலை சந்திரமௌலீஸ்வர ஆலய வரலாற்றை சற்று மீட்டிப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

பண்டைய இலங்கைதீவில் நான்கு திசைகளிலும் ஐந்து சிவ தலங்கள் காணப்பட்டன. அதில் ஒன்றுதான் சந்திரமௌலீஸ்வரம். இலங்கையின் தெற்குத் திசையில் தமிழர் பகுதியான தேவேந்திர முனையில் சந்திரமௌலீஸ்வரம் இருந்ததை கி.மு. முதலாம் நூற்றாண்டின் கிரேக்க யாத்திரீகர்களின் பயணக்குறிப்புக்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு புகழ் பெற்ற இந்தக்கோயில் 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அதன் பின்னர் இங்கு வாழ்ந்த தமிழ் மக்களின் எண்ணிக்கையும் மெல்லக் குறைவடைய, சிங்களவர் எண்ணிக்கை அதிகரித்து இப்போது இப்பகுதி முற்றுமுழுதான சிங்களப் பிரதேசமாக மாறியுள்ளது.

அன்று தேவேந்திர முனை என்று அழைக்கப்பட்ட இந்த தமிழர் பகுதி போர்த்துக்கேயரால் தொந்திரா முனை என அழைக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயரால்தொந்திரா தலை என அழைக்கப்பட்டது. இன்று சிங்கள மக்கள் இந்த இடத்தினை தேவிநுவர என்ற பெயர் கொண்டு அழைக்கின்றனர்.



**அப்படியானால் சந்திரமௌலீஸ்வர ஆலயத்துக்கு என்ன நடந்தது ?**

சந்திரமௌலீஸ்வர ஆலய இடிபாடுகள் இருந்த இடத்தில் விசித்திராம விகார என்ற பௌத்த விகாரை இருந்தது எனப்பௌத்த குருமார்கள் கூறினார்கள். அதனால் அங்கு ஒரு பௌத்த ஆலயத்தினை அமைக்க வேண்டும் என்றனர். இறுதியாக ஒத்பிலிம விகார என்ற பௌத்த ஆலயத்தினையும் கட்டிமுடித்தார்கள்.


இங்கு வேடிக்கையான விடயம் என்னவென்றால் 1998 ஆம் ஆண்டு விகாரையின் கட்டட வேலைக்காக இந்தப் பகுதி அகழப்பட்டபோது நான்கு அடி உயரமும் இரண்டரை அடி விட்டமும் கொண்ட சிவலிங்கமும் அதன் அருகில் ஒரு நந்தியும் கண்டுபிடிக்கப்பட்டன. பல அறிஞர்கள் இந்தச் சிவலிங்கத்தின் பருமனையும் வேலைப்பாடுகளையும் வைத்து அது சந்திர மௌலீஸ்வரத்தின் மூல மூர்த்தி என வாதிட்டனர். ஆனால் பௌத்த குருமார்களோ இவை தங்களின் பௌத்த கோவிலுக்கு உரிமையான சிவதேவாலயக் கருவூலங்கள் என கூறி அவற்றை தமதுடமை ஆக்கிக் கொண்டனர். இதனால் இன்று இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சந்திர மௌலீஸ்வரம் எம் கண்முன்னே முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ்ப் பிரதேசமும் சிங்களப் பிரதேசமாக மாற்றமடைந்துள்ளது.

சந்தரமௌலீஸ்வர வரலாறு எமக்கு ஒரு நல்ல படிப்பினையை உணர்த்துகின்றது. சந்திரமௌலீஸ்வரம் அழிக்கப்பட்ட போது அதனைத் தமிழ்மக்கள் அமைதியாக வேடிக்கை பார்த்தனர். இதன் விளைவு , தமிழ் மக்களின் எண்ணிக்கை அப்பகுதியில் குறைவடைந்தது.

சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அப்பகுதி இப்போது சிங்களப் பெயர் கொண்டு அழைக்குமளவுக்கு நிலைமை கைமீறிப்போய் விட்டது. இறுதியாக சந்திரமௌலீஸ்வர ஆலயம் இருந்த இடத்தில் விகாரையும் கட்டப்பட்டு இன்று அப்பகுதி முற்றுமுழுதான சிங்களப் பகுதியாக மாற்றமடைந்துள்ளது. இன்று அப்பகுதியில் ஒரு ஆலயம் இருந்ததற்கான தடயமேயில்லாமல் அழிக்கப்பட்டதுடன் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளமும் அழிக்கப்பட்டுள்ளது. இந்த யுக்தியை தற்போதும் பயன்படுத்தியே தமிழ் மக்களின் வரலாற்றை அழித்து அதனைச் சிங்கள பௌத்த வரலாறாக மடைமாற்றும் பணியில் பௌத்த பேரினவாத அரசு ஈடுபடுகின்றது. . இதற்கு சிறந்த உதாரணமாக குருந்தூர்மலை விவகாரத்தைக் குறிப்பிடமுடியும் . இப்போது அந்தவரிசையில் வெடுக்குநாறிமலையும் இணைந்துள்ளது. அன்று சந்திரமௌலீஸ்வரம் அழிக்கப்பட்போது அமைதியாக இருந்தோம் இதனால் தென்னிலங்கையில் எம் இனவரலாற்றைத் தொலைத்தவர்களானோம். பின் குருந்தூர் மலை எம் கண்முன்னே சிங்கள - பௌத்த மயமானதை வேடிக்கை பார்த்தோம். . இன்று வெடுக்குநாறி மலையும் இந்தப்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது இதையும் வேடிக்கை பார்ப்பதா தமிழினத்தின் தலைவிதி?

இந்தச் சிங்கள - பௌத்த மயமாக்கலை தமிழ்மக்கள் ஆரம்பத்திலே தடுத்து நிறுத்த வேண்டும். இனிமேலும் திட்டமிடப்பட்ட தமிழின அடையாள அழிப்புக்களை தமிழர்கள் அமைதியாக வேடிக்கை பார்க்கப் போவதில்லை என்பதைச் சிங்களப் பேரினவாத அரசுக்கு வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு இன அடையாள அழிப்புக்கள் இடம்பெறும் போது அரசாங்கத்துக்கு எமது எதிர்ப்பினை கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஊடாக தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டும். அதில் குறிப்பாக இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் என்ற மத வேற்றுமையைக் கடந்து தமிழ் மக்கள் அனைவரும் தமிழ் உணர்வுடன் ஓர் அணியாக ஒன்றிணைய வேண்டும். அதுவே தமிழன் என்ற இன உணர்வை, மதத்தைக் கடந்து எம்முள் உயிர்ப்புறச் செய்யும். அதே போல் இவ்வாறு தமிழ் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படால் , அவை அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் அந்த வழிபாட்டுத் தலத்தை அமைக்கும் வரை நாம் ஓயக்கூடாது. இங்கு எவ்வாறு நம் மக்கள் தமிழ் உணர்வுடன் ஒன்றிணைகிறார்களோ அதேபோல் தமிழ்க் கட்சிகளும் , கட்சி பேதமின்றி தமது பரிபூரண ஆதரவை இந்தப் போராட்டங்களுக்கு வழங்கவேண்டும்.

இதன் மூலமே தமிழின வரலாற்றைப் பாதுகாத்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு ஊடுகடத்தமுடியும்.



**இன்று இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சந்திரமௌலீஸ்வரம் எம் கண்முன்னே முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் பிரதேசமும் சிங்களப் பிரதேசமாக மாற்றமடைந்துள்ளது.**

## தங்கத் தாத்தா வழியில்...

மாதுயர்ப்படு முஸ்லிம்
மனம் போல ஒன்று,
மண்ணிழந்து தவிக்குதமிழ் மகன்போல ஒன்று,
சாதுமார் அரசியலைச் சார்வதனைக் கண்டு
சகியாது புலம்புபவன்
மனம் போல ஒன்று,
சூதுநிறை தொல்லியல்சார்
திணைக்களத்தின்
சூழ்ச்சிகளால் துயர்கொள்ளும்
மனம் போல ஒன்று,
ஆதனமாய் இராவணன்தான்
அன்றமைத்துக்கொண்ட
அருங்கன்னியாயிலுண் டெழுவெந்நீர்ச் சுனைகள்...

தமிழர்தம் [illegible] தமதென்று கொள்ளும்
[illegible]
மனம் போல ஒன்று,
அமிழ்தொத்த புத்திரரைக்
காணாது தேடி
அலைகின்ற அன்னையரின்
மனம் போல ஒன்று,
உமிழ்கின்ற எச்சிதனிற்கூட
இனவாத
ஓர்மவிசங் கண்டுசுடு
மனம் போல ஒன்று,
கமழ்கின்ற தமிழ்த் தாயின்
கலைநகரேயான
கவின்கன்னியாயி லுண்டெழு
வெந்நீர் சுனைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Royal College Of Jaffna

**தனியார் கல்வி நிலையம் , பிரான்பற்று வீதி, சங்கானை.**
**(பழைய மீன் சந்தை அருகில்)**

சகல வகுப்புகளும் சிறு குழுக்களாகவே நடத்தப்படுகின்றன. மாணவர்களின் படிப்பில் ஆசிரியர்களால் கூடிய கவனம் கொடுக்கப்படும். மாணவர்களின் படிப்பு. முன்னேற்றம், ஒழுக்கம் போன்றவை பெற்றோருக்குத் தவறாது அறிவிக்கப்படும்.

**நிர்வாகி - ந. விக்னேஸ்வரன் ஆச்சாரியார்**

**077 675 1649** (CS/50025) AH-1

# காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் பிரிவில் ஆனைக்கோட்டையில் வீட்டுடன் காணியும், அதனுடன் சேர்ந்த 5 காணித் துண்டுகளும் விற்பனைக்குண்டு.

**077 308 8993**

(CS24349) AH-1

# கண்ணீர் அஞ்சலி



அபான்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் **ரமேஷ் சண்முகநாதன்** அவர்களின் சகோதரரும், வவுனியா சமயபுரத்தில் வசிப்பவருமான

**ரெங்கய்யா பத்மநாதன்**

அவர்கள் கடந்த (13.04.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/39649)AH-1

**தகவல்:- நண்பர்கள்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1941



மறைவு 15 . 04 . 2023

## செல்லக்கண்டு கிட்டுணு

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு கிட்டுணு நேற்று (15.04.2023) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், தவமலரின் அன்புக் கணவரும், கனகசிங்கம், தனபாலசிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (பவளம்-சுவிஸ்), குணசிங்கம், அன்னலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், இராசம்மா, காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற ருக்குமணி, மகேசு, கமலாதேவி, கமலா, காலஞ்சென்ற நாகலிங்கம்(சுவிஸ்), யோகம்மா, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், நவநீதராசா(ரவி), ராஜேந்திரகுமார்(வவி-சுவிஸ்) ,றாஜினி(றஜி), கோகிலன் (அப்பன்-பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதர்சினி (சுஜாதா), நளினி(கவி), அஜந்தினி(சோபா-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, சுரேகா(சுவிஸ்), ரவீந்திரன்(ரவி), தனுசிகா (பிரான்ஸ்), மகிந்தன், செல்வகுமார்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், நிரோசன், காலஞ்சென்ற வரதன்(நிக்சன்), தனுசிகா, றெமினா (சுவிஸ்), றெமிசன்(சுவிஸ்) , றொயான்ஸ்(சுவிஸ்), வேணுஜன் (அபி), விஷாந், அத்விக்(பிரான்ஸ்), பர்சித்(பிரான்ஸ்), திபிசாத் (பிரான்ஸ்), கிரிசாளன்(கிரி), ஆகாஷ், அஜீனா, சர்மித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**074 056 9294**

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

# வீடு வாடகைக்கு

யாழ். நகரில் வீடுகள், களஞ்சியசாலைகள், படிக்கும், வேலைசெய்பவர்களுக்கான அறைகள், சுற்றுலாவிகளுக்கான நவீன வசதியுடனான வீடுகள், அறைகள் வாடகைக்கு உண்டு.

**077 345 0039 ,077 348 0039**

# மணமக்கள் தேவை

- ✓ லண்டனில் வசிக்கும் 38 வயது, உத்திராடம் நட்சத்திர பல் வைத்திய பெண்ணுக்கு இலங்கையில் மணமகன் தேவை.
- ✓ கனடாவில் வசிக்கும் RC (1979) கணவனை இழந்த பெண்ணுக்குப் பொருத்தமான மணமகன் தேவை.
- ✓ ஆஸ்திரேலியாவில் வசிக்கும் 50 வயது விவாகரத்து ஆணுக்கு மணமகள் தேவை.

**சொர்க்கம் திருமணசேவை**

**00141 6666 1855/ 077 2000 230/ 077 887 6969**

(CS50012) AH-1

# வலி வடக்கில் பணியாளர்கள் தேவை


வலி. வடக்கில் இயங்கும் வியாபார ஸ்தாபனத்துக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **Charted Accountant (With Computer Knowledge)**
2. **முகாமையாளர் (ஒரு நிறுவனத்தைக் கொண்டு நடத்தக்கூடிய ஆளுமையுள்ள மற்றும் கணினி அறிவுடையவராக இருத்தல்)**
3. **கணக்கியல் அறிவுள்ள வேலையாள்.**
4. **சுத்திகரிப்பாளர்.**

(CS/50015) AH-1

**070 770 4441, 077 770 0441**

# மரண அறிவித்தல்



## கதிரித்தம்பி பேரம்பலம் அண்ணாமலை

யாழ். சாவகச்சேரி பெரியமாவடி பண்டிதர் க.பேரம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் அல்லாரை தெற்கை வதிவிடமாகவும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி பேரம்பலம் அண்ணாமலை கடந்த (12-04-2023) புதன் கிழமை அன்று சிவபதம் அடைந்தார.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் பேரம்பலம் திலகவதி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் சிதம்பரம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், கௌரி, சிற்சபேசன், மயூரன், Dr. மைதிலி, அருணா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா, அஞ்சலா, Dr. கிருபாகரன், ஸ்ரீஅருச்சுனா ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌசி, அருண், கவின், அஜன், ஆரபி, நிலா, அஸ்வின், அவ்னி ஆகியோரின் பாசமிகு பேரனும், Dr. தியாகராசா, காலஞ்சென்ற நடராசா, சிவயோகம், காலஞ்சென்ற பொன்னம்பலம், சிவானந்தன், சிவராசா, சிவஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, யோகாம்பிகை, சாம்பசிவம், Dr. சிவயோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-04-2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10:00 மணியளவில் Jayaratne மலர்சாலையில் (2B Elvitigala MW, Borella, Colombo-8, Srilanka) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப 03:00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| கௌரி | - மகள் | Mobile : +947 7041 5633 |
| சபேசன் | - மகன் | Mobile : +121 4929 9642 |
| மயூரன் | - மகன் | Mobile : +447 122 20534 |
| Dr. மைதிலி | - மகள் | Mobile : +134 7410 0433 |
| அருணா | - மகள் | Mobile : +447 9148 50125 |

(cs.23843) (N-1)

# காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லதுரை வீதியில் காணிகள் விற்பனைக்குண்டு. 6 பரப்பும் - 3பரப்பும் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது.(தரகர் தேவையில்லை) (ACO CS 23844)(K-1)

**தொடர்புகளுக்கு : 074 010 6595**

# விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, ,சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பெரக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசால்ல அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

# மணமகன் தேவை

1992, இந்து, கேட்டை Doctor , கரவெட்டி, பதிவு #8266. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401**

(CS/23839) AH-1

# மணமகன் தேவை

1989, கிறிஸ்தவம், Doctor யாழ்ப்பாணம், பதிவு #8181. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/23839) AH-1

# மணமகள் தேவை

1992, இந்து, சித்திரை Doctor (Australia) , காரைநகர், பதிவு #8778. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/23840A) AH-1

# மணமகள் தேவை

1990, இந்து, கேட்டை Doctor (Australia) , தெல்லிப்பளை, பதிவு #8747. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com

**076 664 9401** (CS/23840) AH-1

# காணி விற்பனைக்கு

கோப்பாயில் 11 பரப்பு காணி விற்பனைக்குண்டு.(மானிப்பாய்- கைதடி, பருத்தித்துறை வீதிகளிலிருந்து 300m)

**தொடர்பு: 076 3424 705**

**வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

நேற்று 15.04.2023 ஆம் திகதி 07 ஆம் பக்கத்தில் வெளிவந்த குறிப்பிட்ட விளம்பரத்தில் **செயலாளர்** எனும் பதத்தை சேர்த்து வாசிக்கவும்.

(cs.24471) (N.1) **விளம்பரதாரர்**

# மணமகள் தேவை

பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) மணமகனுக்கு நன்கு படித்த 40 - 45 வயதுக்குட்பட்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. திருமணம் செய்தவர்கள், திருமணம் செய்து விவாகரத்துப் பெற்ற, பிள்ளைகள் அற்ற மணமக்களும் தொடர்பு கொள்ளலாம். (வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

**0033 781 36 2070**

(CS/49978)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி பரமேஸ்வரி தங்கரத்தினம்

மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தங்கரத்தினம் தனது 90 வயதில் நேற்று (15.04.2023) சனிக்கிழமை 2.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கணபதிப்பிள்ளை தங்கரத்தினத்தின் அன்பு மனைவியும், அமரர் கணபதிப்பிள்ளை தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை லட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் நாகேஸ்வரி லோகசுந்தரத்தின் அன்புச் சகோதரியும், அமரர் சோமசுந்தரம், அமரர் பரமேஸ்வரி, இராசையாவின் அன்பு மைத்துனியும், விஜயகாந்தன் (டென்மார்க்), அமரர் லட்சுமிகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமல சறோஜினி, அம்பிகாதேவி, லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசியா, ஜெனிற்றா, அபிலாஸ், மீரா, கஜேந்தர், காண்டீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.


**004525347468**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல்: அன்பு மகன்**
**விஜயகாந்தன்**

(CR 39651) A-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 01 . 11 . 1943



உதிர்வு 18 . 03 . 2023

## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி (தொழிலதிபர்)

(முன்னாள் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க தென்மராட்சி கிளைத் தலைவர், சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் படையாண்டாந் தோட்டம் முருகன் ஆலய நிர்வாக சபையின் பொருளாளர், ஸ்தாபகர் - ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம் , ஸ்ரீ ஐங்கரன் பல்பொருள் வாணிபம், ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம், சிவகாமி நெற்கபே டச்சு வீதி, சாவகச்சேரி)

திதி:- அபரபக்க துவாதசி

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (17.04.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் இந்நிகழ்வில் அனைவரும் கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**குறிப்பு :- இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.**

**1ம் மைல் வீதி, மருதடி மேற்கு,**
**சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.** (CR/39650)AH-1 **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 01 . 1943



மறைவு 13 . 04 . 2023

## விசுவநாதர் அருளம்பலம்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதர் அருளம்பலம் அவர்கள் கடந்த (13.04.2023) வியாழக்கிழமை மாலை அகால மரணமடைந்தார் .

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற ராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, ராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலசவுந்தரி (பேபி), காலஞ்சென்ற நடராசா மற்றும் கந்தசாமி (தேவன்), நடராஜா (வாமு), ஜெயர்ராணி (ஜெயா) ஆகியோரின் மைத்துனரும், லதா, பாபு, சுபோ ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், வத்சலா, சாந்தி, பிரேமா, காந்தன், காவேரி, தேவபானு, தேவிதா, சஞ்ஜீவன், சபீனா ஆகியோரின் அன்பு மாமாவும் நேருஜன், மேனுசன், தேனுசன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2023) திங்கட்கிழமை சிவன் வீதி ஆவரங்காலில் அவரது இல்லத்தில் காலை 7.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.


**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளிற்கு :**

| | | | |
|---|---|---|---|
| பாபு | - 1416-356-3170 | லதா | –1416-456-7922 |
| வத்சலா | - 1416-575-9923 | காந்தன் | - 1647-964-4276 |
| தேவன் | - 1647-462-3552 | ஜெயா | - 1647-852-1634 |
| ரூபன் | - +33 6 18 61 53 47 | செல்வராணி | - +94 (77) 308 2556 |

# மரண அறிவித்தல்

மலர்வு 24 . 05 . 1950



உதிர்வு 15 . 04 . 2023

## தம்பிராஜா மனோகரன்

யாழ். வண்ணார்பண்ணை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா மனோகரன் நேற்று (15.04.2023) சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் தம்பிராஜா மனோன்மணி தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற பாலசிவனேஸ்வரியின் (ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராஜா செல்வநாயகி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான ஞானசம்பந்தன், சிவசுப்ரமணியம், சண்முகராஜா மற்றும் பவளரெத்தினம், சந்திரவதனா, லலித்தாராணி, மனோராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நளின் (நம்போ)(Bussiness unit head), வாஹினிப்பிரியா (Postdocforal, Research Fellow USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரனின் ( Research data analyst USA) மாமனாரும், உவகையின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 8.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2023) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**தெஹிவளை,**
**கொழும்பு.**
**077 658 9009**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs50024) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 'பெருங்குடி'மக்கள் புத்தாண்டில் 'குஷி'!

கொழும்பு, ஏப். 16

நாட்டில் புத்தாண்டுக்காலத்தில் மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளால் மதுபான விற்பனை 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் தமிழ்- சிங்கள புத்தாண்டு காலத்தில் , பெருங்குடி மக்களின் புத்தாண்டு விருந்துகளால் மதுபான விற்பனை 20 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

மதுபான வகைகளின் விலையை குறைப்பதற்கு வரியில் மாற்றத்தைக் கொண்டுவருமாறு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்த காரணத்தால் பெருந்தொகை எதனோல் களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

# தமிழகத்தில் 61 நாள் மீன்பிடித்தடைக்காலம்

## நேற்று ஆரம்பம்

சென்னை, ஏப். 16

தமிழகத்தில் நேற்று முதல் மீன்பிடித் தடைக்காலம் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரை 61 நாள்களுக்கு மீன்பிடித் தடைக்காலம் நடைமுறையில் இருக்கும்.

இதற்கிணங்க, 61 நாள்களுக்கு மீன்பிடிக்க தமிழக அரசு தடை விதித்துள்ளது.

கடலில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக மீன்பிடி தடைக்காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கிழக்கு மற்றும் மேற்கு கடற்பிராந்தியங்களில மீன்களின் இனப்பெருக்க காலமாக குறிப்பிட்ட நாள்கள் கருதப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் கடலில் மீன்பிடிக்க செல்ல எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. (அ-ஒ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக் கூடும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பண வரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** சிந்தித்துச் செயல்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற் சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக் கூடும். அனுகூலப் பலன்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செதவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய முடிவுஎடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கலாம். சங்கடங்கள் ஏற்படும். தடை நீங்கி மகிழ்ச்சி பெருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியிலிருந்து மீண்டெழாத டில்லி

ஐ.பி.எல்.தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 23 ஓட்டங்களால் வீழ்த்தி சிறப்பான வெற்றியைப் பதிவு செய்தது ஆர்.சி.பி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார் டில்லி அணித் தலைவர் டேவிட் வோர்னர். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆர்.சி.பி. அணிக்கு சுமாரான ஆரம்பமே கிடைத்தது. 42 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய விராட் கோலி 34 பந்துகளில் அரைச்சத்தை பூர்த்தி செய்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த வீரர்களான லொம்றர், மக்ஸ்வெல் முறையே 26, 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது ஆர்.சி.பி. அணி.

175 என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய டில்லி அணி மளமளவென விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது. 2 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் இழக்கப்பட ஆர்.சி.பியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானது. மத்திய வரிசையில் மனிஷ் பாண்டே மாத்திரம் 50 ஓட்டங்களைப் பெற்று டில்லி அணி கௌரவமான தோல்வியைப் பெற உதவினார். நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி. இது இந்த வருட ஐ.பி.எல். தொடரில் டில்லி அணி பெற்றுக்கொண்ட தொடர்ச்சியான ஐந்தாவது தோல்வியாகும். ஆர்.சி.பி. சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய விஜயகுமார் விசாக் 3 விக்கெட்டுக்களையும், சிராஜ் 2 விக்கெட்டுக்களையும், ஹசரங்க, பார்னல் மற்றும் ஹர்சல் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ஒ.ரி1)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
16 - 11 - 1967



மறைவு
15 - 04 - 2023

எமது பாடசாலை அதிபர் **திருமதி சுலபாமதி கணேசமூர்த்தி** அவர்களின் அன்பு கணவர்
**அமரர் நாகராசா கணேசமூர்த்தி** அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆறாத் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா இறையடியில் சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**
**பண்ணாகம், சுழிபுரம்.**


# இறுதி ஓவரில் பஞ்சாப் வெற்றி


ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு இடம்பெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ் அணி.

ஷிகர் தவான் இந்தப் போட்டியில் விலகியிருந்த நிலையில் சாம் கரணின் புதிய தலைமையின் கீழ் களமிறங்கியது பஞ்சாப் கிங்ஸ் அணி. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சாம் கரண் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லக்னோ அணிக்கு ராகுல் மற்றும் கய்ல் மயர்ஸ் இணை ஓரளவு சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. அணி 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை மயர்ஸ் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க லக்னோவின் சரிவு ஆரம்பமாகியது. ஒரு முனையில் அணித்தலைவர் ராகுல் நிலைத்து நின்று ஆடினாலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாக சரியத் தொடங்கியது. ரபாடா வீசிய 14ஆவது ஓவரில் குருனால் பாண்டியா, நிக்கொலஸ் பூரன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க பஞ்சாப் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் தொடர்ந்தும் மேலோங்கியது. ராகுல் மாத்திரம் தனியாளாகப் போராடி அணி 150 ஓட்டங்களை எட்ட உதவினார். நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணி. ராகுல் 56 பந்துகளில் 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக சாம் கரண் 3 விக்கெட்டுக்களையும், ரபாடா 2 விக்கெட்டுக்களையும் அர்ஸ்தீப் சிங், ப்ரார் மற்றும் ராசா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

160 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்பம் தடுமாற்றமாகவே அமைந்தது. தனது கன்னிப் போட்டியில் விளையாடிய அதர்வா ரைட் ஓட்டமெதனையும் பெறாமலும் பிரப்சிம்ரன் சிங் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மத்தியூ சோட் 34 ஓட்டங்களையும் பட்டியா 22 ஓட்டங்களையும் பெற்று ஆறுதலளித்தனர். மத்திய வரிசை வீரரான ராசா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 41 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். இறுதி ஓவரில் வெற்றிக்காக 7 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களத்திலிருந்த சாருக் கான் பதற்றமில்லாமல் அடித்தாடி வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். இவர் 10 பந்துகளில் 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் சராக், மார்க் வூட் மற்றும் பிஸ்னோய் தலா 2 விக்கெட்டுக்களையும் கௌதம், குருனால் பாண்டியா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

(ஒ.ரி1)


## மரண அறிவித்தல்



### நாகராசா கணேசமூர்த்தி

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கணேசமூர்த்தி நேற்று (15.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி நாகராசா பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வனும், திருமதி க.சுலபாமதி (அதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் கனகலிங்கம் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரா, இந்திரா, சுபத்திரா ஆகியோரின் அருமைச் சகோதரனும், ஜெகநாதன், அமரர் சத்தியநேசன், நாகராசா ஆகியோரின் சகலனும், திருபாமதி சத்தியவரதன், அமரர் பிரபாமதி மற்றும் சுகுணவேள், யாமினி, சபிதாமதி றமேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சங்கவி, ஜீவிதா, கம்சா, மதுசன், சத்தியேந்திரா, கோனுஜா, சானுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுசி, ரம்மியன், ரம்மியா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.


**077 790 6322**
**077 911 6336**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 39654) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 06 . 1951



மறைவு
14 . 04 . 2023

### இராசையா தறுமலிங்கம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் நாவற்குழி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தறுமலிங்கம் கடந்த (14.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் பாசமிகு கணவரும், நிர்மலராஜன் (U.K), சுவிந்தராஜன், விஜயராஜன், றோஜினி, ராகினி, கமலராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராணி (U.K), தவறாஜினி, குணவதனி, நிறஞ்சன், உமாகரன், சாளி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிஷா, நிருஷா, கயுதா, கோகுலன் - சானுகா, பிரதீப், விதுஷன், துவாரகன், சதுசன், டிஷானா - கிருபாகரன், திலக்சன் - எமி, தமிழ்வர்ணன், அபிராமி, அபிசா, தவிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அபினாஸ், விகாஸ், மதுசன் ஆகியோரின் அன்பு பூட்டனும், மணி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கமலாதேவி மற்றும் துரைராசா, காலஞ்சென்றவர்களான சிவபாலசுந்தரம், சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விமலாதேவி, சிவராசா, பாலசிங்கம், சீவரத்தினம், குணராசா, அன்னலிங்கம் மற்றும் ஈஸ்வரி, காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், வேலுப்பிள்ளை மற்றும் பங்கீசராணி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, தேவி, கமலம் மற்றும் ராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2023) திங்கட்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் நாவற்குழி மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**நாவற்குழி மேற்கு,**
**கைதடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 707 725**

(CS 24489) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் விவாதம் தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, ஏப். 16

எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முன் வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அது தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி நடை பெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதித் தீர் மானம் எடுக்கப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலை மையில், 20ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளதாக, நாடா ளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

புத்தாண்டின் பின்னர் இடம்பெறவுள்ள முதலாவது கட்சித் தலைவர்கள் கூட்டம் இதுவாகும். இதனி டையே, புத்தாண்டின் பின்னரான முதலாவது நாடாளுமன்ற அமர்வு, எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்றையதினம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றில் முன்வைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கமைய, சட்டவரைவு, நாடாளு மன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. 20ஆம் திகதி இடம் பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இது குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளது. (அ-ஓ.இ)

### உள்ளகப்...

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உரு வாக்குவதற்கான சட்டவரைவு மேற்கொள்ள அமைச் சரவை அனுமதி வழங்கியிருந்தது. ஆனால், பாதிக்கப் பட்ட தமிழ் மக்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை - உள்ளகப் பொறிமுறையை - ஏற் றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்தி யுள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைப் பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் அதற் குப் பொறுப்புக்கூறுவது தொடர்பில் அரசினுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் அந்த ஆணைக் குழு மிகவும் அவசியம். இலங்கை இறைமையுள்ள நாடு. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கு ஆதரவ ளித்தே தீரவேண்டும். அதைவிடுத்து சர்வதேசம்தான் தீர்வைத்தரும் என்று காத்திருப்பவர்கள் குறித்தோ, ஆணைக்குழுவை எதிர்ப்பது தொடர்பிலோ நான் கருத் துக்கூறவும் விரும்பவுமில்லை அதுபற்றி அலட்டிக் கொள்ளவும் விரும்பவுமில்லை. நாட்டின் அதிஉயர் சபையில் சட்டவரைவைத் தயாரித்து ஒப்படைப்போம். அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்பதுதான் எங் களின் விருப்பம்' என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார். (அ-ஓ.5,22)

### பண்ணையில்...

தீவகத்துக்கான நுழைவாயிலாகவுள்ள பண்ணைச் சுற்றுவட்டத்துக்கு அருகில் அம்மன்சிலை நேற்றுமுன் தினம் வைக்கப்பட்ட நிலையில் அதனை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாணப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சிலைக்கான அபிஷேகங்களை நேற்றுமுன் தினம் உருத்திரசேனை அமைப்பினர் மேற்கொண்டி ருந்தனர். அந்த அமைப்பின் தலைவரை நேற்று அழைத்த பொலிஸார் இரண்டு மணி நேரம் அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். அத்துடன் நீதிமன்றத்தின் ஊடாக சிலையை அகற்றுவதற்குரிய நடவடிக்கை களை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (அ-ஓ.26)

### நல்லை...

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம், 'தமிழ்ப் புத் தாண்டை மரபுரிமைக்காக எம் உணர்வுகளை வெளி காட்டுவதுடன் ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நல்லை ஆதீன முன்றிலில் உண்ணா விரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ஓ.இ)

### யாழ்ப்பாணத்தில்...

டுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்துள் ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர் காய்ச்சலால் அவதிப்பட்ட நிலை யில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள் ளப்பட்ட சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு காய்ச்சலுடன் வந்த மூவருக்கு மேற்கொள் ளப்பட்ட சோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஓ.இ)

### முகக்கவசங்களை...

யாளம் காணப்பட்டுள்ள நிலையில் முகக்கவசங்களை மக்கள் அணிவதுநல்லது என்று யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனா நந்தா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ளதால் மக்கள் கடந்த காலங்களில் பின்பற்றிய நடைமுறைகளை இனிமேலும் பின்பற்றுவது நல்லது.

வெளியே செல்லும்போது முகக்கவசங்களை அணி தல், தனிநபர் இடைவெளியைப் பேணுதல், சவர்க்கார மிட்டு கைகளை சுத்தமாகக் கழுவுதல், இயன்ற அளவு கூட்டமாக ஒன்று சேர்வதை தவிர்த்தல் போன்ற செயற் பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தமுடியும் - என்றார். (அ-ஓ.இ)

### 2 மாதங்களின்...

தெரிவித்துள்ளனர்.

கனடாவிலிருந்து வந்த வயோதிபத் தம்பதியர் தமது சொந்த ஊரான அனலைதீவில் தங்கியிருந்தனர். கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அவர்களது வீடு புகுந்த சிலர் தம்பதியரைத் தாக்கி காயப்படுத்தியிருந்த னர். அத்துடன் அங்கிருந்த பணம் மற்றும் நகை என் பவற்றையும் கொள்ளையடித்திருந்தனர். 'பைல்' எங்கே? என்று கேட்டும் அச்சுறுத்தியதோடு, தம்பதிய ரின் கடவுச்சீட்டையும் எடுத்துச்சென்றிருந்தனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த இருவரை யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் வழிகாட்டலில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகரின் கீழ் இயங்கும் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவு நேற்றுக் கைது செய்துள்ளது. அவர்களி டமிருந்து 4 கைத்தொலைபேசிகள், கொள்ளையடிக் கப்பட்ட தங்க நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

'நாங்கள் வேலணைக்குச் சென்று அங்கிருந்து படகு மூலம் அனலைதீவுக்குச் சென்றோம். அங்கிருந்து ஜி.பி.எஸ். கருவியின் வழிகாட்டலுடன் நள்ளிரவு 12 மணியளவில் வயோதிபத் தம்பதியரின் வீட்டைச் சென் றடைந்தோம். அந்த வீட்டுக் கிணற்றடியில் இருந்து மதுபானங்கள் அருந்திவிட்டு வீடு புகுந்து தாக்கி கொள் ளையடித்தோம்' என்று சந்தேகநபர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை- 20 நாள்களுக்கு முன்னர் அரி யாலை, பூம்புகாரைச் சேர்ந்த ஒருவர் இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைதாகியி ருந்தார். இந்தநிலையில், நேற்றுக் கைதான இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணை களில் அரியாலை சந்தேகநபருக்கும் தாக்கு தல் சம்பவத்தோடு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஓ.26)

### குறிகாட்டுவான்...

நயினாதீவு உள்ளிட்ட தீவகப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளும் பயணிகள் இறங்கு துறையாக குறிகாட்டுவான் விளங்குகின்றது. சிங்கள சுற்றுலாப் பயணிகளும் இந்தத் துறை முகம் ஊடாக பயணிக்கின்றனர். நயினாதீவி லுள்ள விகாராதிபதி தனியார் படகுச் சேவையை நடத்தி வருகின்றார். அவரது படகுக்கான விற்பனைச்சீட்டில் நயினாதீவின் பெயர் இல்லாமலாக்கப்பட்டு நாகதீப என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



தற்போது தமிழர் தாயகத்தில் இந்து ஆலயங்களை அழித்து புத்தர் சிலைகளை அமைக்கும் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் குறிகாட்டு வான் துறைமுகத்துக்கான நுழைவாயிலில் இந்த அரச மரம் வைக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

### இன்ரபோலிடம்...

இன்ரபோலின் உதவி நாடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

'கனேடியப் பிரஜைகள் மீதான தாக்குதலுடன் தொடர்பு டைய சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப் பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணை களிலிருந்து வழங்கப்பட்ட பணிப்புக்கு அமைவாகவே இந்தத் தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமை தெரியவந்தது. தனிப்பட்ட பகைமை காரணமாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. கனடாவிலிருந்து இங்குள்ளவர்களுக்குக் கட்டளை பிறப் பித்த பிரதான சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு இன்ரபோலின் உதவி நாடப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கைக்கு வந்தால் கைது செய்வதற்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்று செனரத் குறிப்பிட் டார். (அ-ஓ,26)

### இந்தியத்...

இந்திய அரசாங்கத்தால் வடக்கின் 5 மாவட்டங்களை யும் சேர்ந்த 500 பயனாளிகளுக்கு உதவிப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 12 மற்றும் 13ஆம் திகதி களில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தியாவிடமிருந்து வடக்கு மாகாண மக்களுக்கான 'அட்சய பாத்திர உதவிகள்' என்னும் தொனிப்பொரு ளில் இவை வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல். எவ். அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் கல்வி அமைச்சருமான சர்வேஸ்வரன், கிளிநொச்சியில் நடை பெற்ற நிகழ்வில் அந்தக் கட்சியின் தலைவரும் நாடா ளுமன்ற முன்னாள் உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமசந்திரன், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட் டங்களில் அந்தக் கட்சியின் அமைப்பாளர்களும், வவுனியா மாவட்டத்தில் அந்தக் கட்சியின் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் பங்கேற்றுள்ளனர். (அ-ஓ-5)


## பராமரிப்பாளர் தேவை

கோப்பாய் பகுதியில் வீடு ஒன்றில் தங்கி நின்று வயோதிபப் பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.

(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.)

தொடர்பு: 077 310 1357

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அரு காமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 077 2880 152, 076 4365 814

(CS 24478 D/A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் வீட்டு வேலை செய்வதற்கு நல்லொழுக்கம் உடைய பணிப்பெண் தேவை.
(CS 24475)(J-1) 077 308 3007

## இரும்பு கேற் விற்பனைக்கு
கடை ஒன்றில் முன் பக்கத்தில் பாவித்த (13 அடி அகலம், 7 1/2 அடி உயரம்) இரும்புக் கேற் விற்பனைக்குண்டு.
077 077 2313 (CS/50013) AH-1

## வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், அச்சக வீதியில் ( Press Lane), ஆயர் இல்லத்துக்கு அருகில் மூன்று அறைகள் கொண்ட பெரியவீடு, வாடகைக்கு விடப்படும். வைகாசி மாதம் தொடக்கம் ( May) குடியேறலாம்.
(CS24440)(AH-1)
077 177 0143, 076 544 2304

## வேலையாள் தேவை
விற்பனை நிலையம் ஒன்றுக்கு பெயின்றிங், வெல்டிங் வேலை தெரிந்த ஆண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.
077 836 2408, 076 381 0939

## காணி விற்பனைக்கு
தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 0110 765

## பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலைகள் செய்ய பணிப்பெண் தேவை.
077 719 5483

## புதிய மாடிவீடு வாடகைக்குண்டு
மல்லாகம்- புன்னாலைக்கட்டுவன், 764 பஸ் Route இல் அழகான இயற்கை View உள்ள புதிய மாடிவீடு வாடகைக்குண்டு. நிறுவனத் தேவையுடையோர், வெளிநாட்டவர்கள் முன் விரும்பப்படுவர். மேலும் நிலத்து இணைப்பு ஒரும் உண்டு. 075 075 4802

## காணி விற்பனைக்கு
சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(CS24384)(J-1) 070 701 3060

## விற்பனைக்கு
- மீசாலை வடக்கு வேம்பிராயில் 10 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.
- மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு.

077 227 6173

## சிற்றுண்டிகள் தேவை
யாழ் நகரில் இயங்கும் உணவகம் ஒன்றுக்குத் தினமும் சைவ சிற்றுண்டிகள் தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 553 0813 (CS/50027) AH-1

## விற்பனைக்கு
14', 16" இத்தாலி பட்டடை
Toyota Forkclip
076 525 0133

## வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், பீச் வீதியில் வீடும், சுன்னாகத்தில் கடைத் தொகுதியும், வவுனியாவில் திருமண மண்டபமும், உடுப்பிட்டியில் பண்ணை வசதியுடன் கூடிய வீடும், மன்னார் வெள்ளாங்குளத்தில் கடைத் தொகுதியும் விற்பனைக்குண்டு.
077 221 5740

## வீடு விற்பனைக்கு
சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 732 6792 (CS24464)(J-1)


## சிவசிதம்பரம் நூற்றாண்டு மலர் வெளியீட்டு ஏற்பாடு

யாழ். ஏப். 16 தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம் பரத்தின் நூற்றாண்டு மலரை வெளியிடுவதற்கு அவரது சொந்த ஊரான வடமராட்சி-கரவெட்டியில் சிவசிதம்பரம் நூற்றாண்டு விழாக்குழு ஏற்பாடுகளை செய்துவருகிறது. அவரின் பிறந்த நாளான ஜூலை 20ஆம் திகதி வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர் பற்றிய ஆக்கங்கள், புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் வைத்திருப்போர் 0771174956 என்ற கைத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு நூற்றாண்டு விழாக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

(ஒ-இ)


## வீடு வாடகைக்கு
பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கையில் இணைந்த குளியலறைகளுடன் கூடிய (AC பொருத்தப் பட்ட) படுக்கையறைகள் மற்றும் வாகனத்தரிப்பிட வசதி மற்றும் வரவேற்பறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(Doctors or Government Staffs விரும்பத்தக்கது)
077 184 6881 / 0044 7848 033698

## வீடு வாடகைக்கு உண்டு
பலாலி வீதி ஊரெழுவில் பலாலி வீதியில் இருந்து 75m தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 310 1357

## காணி விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)
- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்


பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை
தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

## காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு.
**நிலப்பரப்பு**
புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.
தொடர்பு: 076 755 8606
077 6385 683
(CS 24455)A-1

## காணி விற்பனைக்கு உண்டு
- யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).
தொடர்பு:
077 076 0389
076 9119 371
076 7390 413
(CS 24454) A-1

## காணி விற்பனைக்கு
**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 5 பரப்பு 13.72 குளி காணி விற்பனைக்கு உண்டு.**
**நிலப்பரப்பு**
- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 2 பரப்பில் 2 துண்டும் 1 பரப்பு 13.72 குளி காணி துண்டுகள் மட்டுமே உள்ளன.




**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
**தொடர்புகளுக்கு:**
**ஜெயம்**
077 814 7389
077 986 5457
(CS 24470)(K-1)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 சித்திரை 3 ஞாயிற்றுக்கிழமை (16.04.2023) சிகரம் : 142

மாரியினால் தெருக்களிலே வெள்ளம்
மூன்றுமுறை நிரப்பிவிட்டார் பள்ளம்
காரியத்தை முடித்தவுடன்
காசெடுத்து விட்டார்தானே
ஆரறிவார் எவ்விடத்தில் கள்ளம்?

- வடிவழகையன்

# மேலும் ஒரு கோவிலுக்கு ஆபத்து?

நிலாந்தன்

கடந்த திங்கட்கிழமை பங்குனித்திங்களன்று நெடுங்கேணியில் உள்ள நெடுக்குளம் அம்மன் கோவிலை வழிபடச் சென்ற பக்தர்களைத் தொல்லியல் திணைக்களம் தடுத்து நிறுத்தியதாக செய்திகள் வெளியாகின. பக்தர்களைப் பொறுத்தவரை அது கோவில். தொல்லியல் திணைக்களமோ அதை ஒரு தொல்லியல் அமைவிடமாகக் கருதுகிறது. நாட்டின் தொல்லியல் சட்டங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் இறுக்கமானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார். ஒரு மக்கள் கூட்டத்தால் தொடர்ச்சியாக வழிபடப்படும் ஓரிடத்தை தொல்லியல் திணைக்களம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்றால் முதலில் அந்த வழிபாட்டிடத்தை நிர்வகிக்கும் தனிநபர் அல்லது நிர்வாகக் கட்டமைப்பிடம் அனுமதி பெறப்படவேண்டும் என்று துறைசார் வல்லுநர்கள் கூறுகிறார்கள். அழிவடையும் நிலையில் உள்ள ஒரு மரபுரிமைச் சின்னத்தை தொல்லியல் திணைக்களம் பொறுப்பேற்பது வேறு. மக்களால் தொடர்ந்து வழிபடப்படும் ஓரிடத்தை பொறுப்பெடுப்பது வேறு என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.



பொலநறுவையில் காணப்படும் பாழடைந்த பல சிவாலயங்களில் இரண்டாவது சிவனாலயம் என்று அழைக்கப்படுவது இப்பொழுது பக்தர்களால் வழிபடப்படுகிறது. அதற்குப் பொறுப்பாக ஒரு சிங்களப் பூசாரி இருக்கிறார். தமிழ் - சிங்கள பக்தர்கள் அங்கே போவதுண்டு. அது தொல்லியல் விதிகளுக்கு முரணானது என்றாலும் அங்கே ஒரு நெகிழ்ச்சிப் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையும் துறைசார் புலமையாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு மக்கள் கூட்டத்தின் வழிபாட்டு உரிமையும் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரமும் முட்டும் இடங்கள் இவை.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை தொல்லியல் திணைக்களத்தை தமிழ் மக்கள் ஒரு நட்பான திணைக்களமாகப் பார்க்கவில்லை. தமிழ் மரபுரிமைச் சொத்துக்களை தொல்லியல் திணைக்களம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது சிங்கள - பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதி என்று தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றார்கள். குருந்தூர் மலையிலும் வெடுக்குநாறிமலையிலும் விவகாரம் அப்படித்தான் காணப்படுகிறது. கன்னியா வெந்நீர் ஊற்றிலும் நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையிலும் நிலைமை அப்படித்தான்.

தொல்லியல் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் சிதைந்த அல்லது சிதைந்து செல்லும் ஒரு மரபுரிமைச்சொத்தை பக்தர்கள் அணுகும் பொழுது அங்கே துறைசார் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற வரையறைகள் இருப்பது நியாயமானது. ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அவ்வாறல்ல. தமிழ் மக்கள், தொல்லியல் திணைக்களத்தை சிங்கள- பௌத்த மயமாக்கலின் கருவியாகவே பார்க்கிறார்கள்.

கலாநிதி. யூட். பெர்னாண்டோ, பேராசிரியர். நிரா விக்கிரமசிங்க போன்ற சிங்களப் புலமையாளர்களே இலங்கைத்தீவின் தொல்லியல் துறையைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள். கலாநிதி. யூட். பெர்னாண்டோ "மரபுரிமையும் தேசிய வாதமும்-சிறீலங்காவின் விஷம்" என்ற தலைப்பில் 2015மார்ச் மாதம் "கொழும்பு ரெலிகிராப்"பில் மிக விரிவான ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். தொல்லியல் திணைக்களம் மட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்வரும் எல்லாத் திணைக்களங்களுமே சிங்கள - பௌத்த அரசுக் கொள்கையின் உபகரணங்கள்தான். முப்படைகளும் உட்பட நீதிபரிபாலன கட்டமைப்பு, பொலிஸ் திணைக்களம் உட்பட அரசுத் திணைக்களங்கள் அனைத்தும் அரசின் உபகரணங்கள்தான். அரசின் கொள்கை எதுவோ அதை அவை அமுல்படுத்தும். அவற்றுக்கெல்லாம் சுயாதீனம் இருப்பதாகக் கற்பிக்கப்படுவது ஒரு மாயை. எனவே அரசுக் கொள்கை எதுவோ அதைத்தான் அரச உபகரணங்கள் முன்னெடுக்கும். இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது அல்லவா? அரசின் கொள்கை சிங்கள- பௌத்த மயமாக்கல் என்றால் திணைக்களங்கள் அதைத்தான் அமுல்படுத்தும். நாடு ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதன் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய அதிருப்தி, கோபம் என்பவற்றைத் திசை திருப்புவதற்கு தமிழ்மக்கள் மீதான தொல்லியல் ஆக்கிரமிப்பை தூண்டி விட்டால் போதும். சிங்களப் பொதுஜனத்தின் கோபத்தை இலகுவாகத் திசைதிருப்பலாம். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையின் விளைவாகத்தான் அண்மைக்காலமாக தமிழ் மக்களின் வழிபாட்டுரிமை, மரபுரிமை போன்றன தீவிரமாக கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதற்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆங்காங்கே எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள்.

உலகில் பெரும்பாலான நாடுகளில் தொல்லியல் துறை எனப்படுவது தனது நாட்டின் பெருமைமிகு மரபுரிமைச் சொத்துக்கள் என்று கருதப்படும் இடங்களை பாதுகாக்கின்றது. அதனை அவர்கள் இனரீதியாகவோ மதரீதியாகவோ பார்ப்பதில்லை. பதிலாக அதைத் தமது நாட்டின் மரபுரிமைச் சொத்து என்றுதான் பார்க்கிறார்கள். அந்த அடிப்படையில் அதைப் பாதுகாக்கின்றார்கள் என்பதனை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உதாரணமாக இந்திய நாகரிகத்தின் தொட்டில்களில் ஒன்றாகக் கருதப்படும் மொகஞ்சதாரோ-ஹரப்பா பாகிஸ்தானின் எல்லைக்குள்தான் உள்ளன. ஆனால் இஸ்லாமிய நாடாகிய பாகிஸ்தான் அந்த அகழ்வாராய்ச்சிப் பிரதேசத்தை தனது மரபுரிமைச் சொத்தாகப் பேணிப் பாதுகாக்கின்றது. உலகின் மிகப்பெரிய முஸ்லிம் சனத்தொகை இந்தோனேசியாவில் உண்டு. அங்கே காணப்படும் மிகப்பெரிய புத்தர் சிலைகளை அங்குள்ள இஸ்லாமிய அரசு பாதுகாக்கின்றது.

ஆனால் இலங்கைத் தீவிலோ தொல்லியல்துறை எனப்படுவது ஆப்கானின் தலிபான்களைப் போல செயற்படுகின்றதா என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் உண்டு. ஆப்கானில் உள்ள பிரமாண்டமான புத்தர் சிலைகளை தலிபான்கள் சேதப்படுத்தியதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். இலங்கைத் தீவின் அரசாட்சி பாரம்பரியத்தைப் பொறுத்தவரை இது ஒரு வழமைதான். 2009 க்குமுன் அரச படைகள் சிங்களமய மாக்கலை போர் என்ற வடிவத்தில் முன்னெடுத்தன.

2009 க்குப்பின் திணைக்களங்கள் அதனை வேறுவடிவத்தில் முன்னெடுக்கின்றன. அவ்வளவுதான் வித்தியாசம். சிங்கள பௌத்த மயமாக்கல் 2009 க்கு முன்பு முழு வேகத்தில் இடம் பெறமுடியவில்லை. ஏனென்றால் போர் இருந்தது. ஆனால் இப்பொழுது முழு நாடுமே வெற்றி கொள்ளப்பட்ட நிலம். எனவே எங்கெல்லாம் சிங்கள - பௌத்த மயமாக்கலைச் செய்யலாமோ அங்கெல்லாம் செய்யலாம். திணைக்களங்கள் மட்டுமல்ல, மாகாண ஆளுநர்களை வைத்தும் செய்யலாம். மாகாண நிர்வாகம் இயங்காத ஓர் அரசியற் சூழலில், உள்ளூராட்சிசபைகள் இயங்காத ஓர் அரசியற் சூழலில், சிங்கள- பௌத்த மயமாக்கலை இலகுவாக முன்னெடுக்கலாம். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

இந்த சிங்கள-பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்கு தமிழ்மக்கள் மத்தியில் வலிமையான எதிர்ப்பு இல்லை. தமிழ்மக்கள் காட்டி வரும் எதிர்ப்புக்கள் அதைத் தடுக்கப் போதுமானவை அல்ல. அவ்வாறு எதிர்க்க முடியாத ஒரு சூழலில், அல்லது எதிர்ப்பைக் காட்டவல்ல வலிமையான கட்சிகளின் கூட்டோ, மக்கள் இயக்கமோ இல்லாத ஒரு வெற்றிடத்தில், தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்தியாவைத் தஞ்சம் அடைகின்றார்கள். இந்துக்களின் மரபுரிமைச் சின்னங்கள் அழிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி பாரதிய ஜனதா அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற முயற்சிக்கின்றார்கள்.

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி இந்த விடயத்தில் இதுவரையிலும் உத்தியோக பூர்வமாகக் கருத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. இந்திய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுநிலை குறித்து "தண்ணீரைவிட ரத்தம் அடர்த்தியானது" என்று கூறுகிறார். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொறகொட சிங்கள- பௌத்த பாரம்பரியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலே எப்படிப் பிணைப்புகளை ஏற்படுத்தலாம் என்று சிந்தித்து உழைக்கிறார். அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவுகள் என்று பார்த்தால், இந்த விடயத்தில் சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்புக்கும் இந்திய அரசுக் கட்டமைப்புக்கும் இடையே ஒப்பீட்டளவில் நெருக்கமும் இடையூடாட்டமும் அதிகம்.

அவ்வாறான கட்டமைப்புசார் உறவுகள் தமிழ் மக்களுக்கு இல்லை. இந்த வெற்றிடத்தில் தான் தமிழ்மக்கள் நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் உதிரிகளாக பாரதிய ஜனதா அரசாங்கத்தை அணுகிவருகிறார்கள். ஆனால் இந்த அணுகுமுறையின் விளைவாக இதுவரையிலும் இந்தியா தமிழ் மக்களுக்கு பரிந்துரைக்கும் தீர்வு , 13 ஆவது திருத்தத்தைக் கடக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை மீது நிர்ணயகரமான விதங்களில் அழுத்தத்தை பிரயோகிக்கவும் இந்தியாவால் முடியவில்லை. கடந்த சில தசாப்தங்களாக இலங்கையைப் பொறுத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்துவிட்டது என்பதே நடைமுறை உண்மையாகும். அம்பாந்தோட்டையில் சீனா 99 ஆண்டு கால குத்தகைக்கு குந்தியிருக்கின்றது. கொழும்புத் துறைமுகத்தில் சீனப் பட்டினம் சீனாவின் செல்வாக்குக்குள்தான் இருக்கும். இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம். இந்த மண்டலத்துக்குள் ஒரு வெளிப் பேரரசு இப்படி நிரந்தரமாக வந்து குந்தியது என்பது இந்திய வெளியுறவு அணுகுமுறைகளின் தோல்விதான். இப்படிப்பட்டதோர் வெளியுறவுச் சூழலில் இந்துத் தமிழர்களை இந்தியா காக்க வேண்டும் என்று கேட்கும் குரல் அண்மைக் காலங்களில் வலிமையடைந்து வருகிறது.

தமிழ் மக்கள் மிக நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற சக்திகள் அந்தக்கடல் எல்லையின் மீது ஆதிக்கம் செலுத்தமுடியும். தனது செல்வாக்கு மண்டலத்தில் நிரந்தரமாகத் தரித்து நிற்க எத்தனிக்கும் சீனாவை அகற்றுவதற்கு இந்தியாவுக்கு தமிழ் மக்கள் தேவை. அதேபோல சிங்கள - பௌத்த மயமாக்கலை தடுப்பதற்கு தமிழ் மக்களுக்கு இந்தியா தேவை. ராஜதந்திரம் எனப்படுவது தேவைகளின் கலைதான். நீதி நியாயத்தின் கலை அல்ல.

ஒரு வரலாற்று அறிஞர் சுட்டிக்காட்டியது போல, பாபர் மசூதியை உடைத்த ஒரு கட்சியிடம் உடைக்கப்படும் சிவனாலயங்களுக்காக நீதி கேட்பதில் அறநெறி சார்ந்த முரண் உண்டு. ஆனால் ராஜதந்திரத்தில் அறமெல்லாம் கிடையாது. நீதி நியாயங்கள் கிடையாது. நலன்சார் உறவுகளுக்கு இடையிலான பேரம்தான் உண்டு. நீதிமான்களிடந்தான் தமிழ்மக்கள் நீதியைக் கேட்கலாம் என்றால் இந்தக் கேடுகெட்ட பூமியில் தமிழ்மக்கள் யாரிடமும் நீதியைக் கேட்க முடியாது. எனவே இந்தியாவோடு தமிழ்மக்கள் பரஸ்பரம் நலன் சார்ந்த ஒரு புரிந்துணர்வுக்கு போக வேண்டும்.

இந்தியாவின் பாதுகாப்பு வியூகத்தில் தமிழ் மக்கள் எப்படிப் பங்காளிகளாவது என்று சிந்திக்கவேண்டும். அதற்கு தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான வெளியுறவுத் தரிசனங்கள் இருக்க வேண்டும். வெளியுறவுக் கட்டமைப்புகள் இருக்கவேண்டும். நாளை யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் உணவு தவிர்ப்புப் போராட்டம் அவசியம். அதேயளவுக்கு அவசியம், பொருத்தமான வெளியுறவுக் கூட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பும் பொறியும்!

அ.நிக்ஸன்




## தவறான அரசியல் அணுகுமுறைகளைச் சட்ட ஆதாரங்களோடு வெளிப்படுத்த வேண்டிய தமிழ்த்தரப்பு

பல வழிகளிலும் இந்தியா, இலங்கைக்குக் கொடுக்கும் அழுத்தங்களை சிங்கள ஆட்சியாளர்கள் குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுச் செயற்படுத்துவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை (Acting Appearance) காண்பித்தாலும், அமெரிக்க - சீன அரசுகளுடன் நேரடியாக உறவைப் பேணி இலங்கையின் முக்கியத்துவத்தைக் காக்கவேண்டும் என்ற அரசியல் நோக்கமே விஞ்சிக் காணப்படுகின்றது.

இந்தியாவுடன் உறவைப் பேணினாலும், இந்தியாவைக் கடந்தே ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாளவேண்டும் என்ற சிந்தனை சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அனைத்து சிங்கள ஆட்சியாளர்களிடமும் உண்டு என்பது வெளிப்படை குறிப்பாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிரந்தரமாகக் கைவிடுவது என்ற "பொது அரசியல் சிந்தனை" ஜே.வி.பி. உள்ளிட்ட சிங்களக் கட்சிகளிடம் உண்டு.

இதன் பின்னணியைப் புரிந்துகொண்ட நிலையிலேதான் இந்தியாவும், இந்தோ - பசுபிக் உள்ளிட்ட புவிசார் அரசியல் - பொருளாதார தேவைகள் கருதி இலங்கையோடு காய் நகர்த்துகின்றது. ஆனால் இந்தக் காய் நகர்த்தும் உத்திகளினால் இந்தியா சொல்வதைக் கேட்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழ்த்தேசியக் கட்சிகள் சிக்குண்டுள்ளன.

குறிப்பாக அரசியல் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ஏற்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளன. இருந்தாலும் பதின்மூன்று பற்றிப் பேசவேண்டும் என்று கூறிக் காலத்தைக் கடத்திவிடும் உத்திகளையே ரணில் கையாளுகின்றார் என்பது இரகசியமல்ல. இந்தச் சிங்களத் தேசிய அரசியல் பின்புலத்திலேதான் தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கானவரைவு குறித்த நிலைப்பாடு மற்றும் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து, கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு ரணில் அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.



ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளுக்கு ஏற்ப உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையை அமைப்பது போன்ற அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் , அமெரிக்கா, கனடா உள்ளிட்ட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள், இந்தியத் தூதுவர் ஆகியோர் உள்ளிட்ட சர்வதேசப் பிரதிநிதிகளுக்கே கடந்த திங்கட்கிழமை இந்த விளக்கமளிக்கப்பட்டுள்ளது.வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோர் இணைந்து கூட்டாக இந்த விளக்கத்தையளித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் தற்போது ஜனநாயகச் சூழல் உருவாகியுள்ளது என்றும், தமிழ்த் தேசியக் கட்சிகள் இலங்கை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட அனைத்துத் தேர்தல்களிலும் பங்குபற்றி இணைந்து வாழும் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஏற்றிருப்பதாகவும் அமைச்சர் அலி சப்ரி இதன்போது கூறினார் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. இராஜதந்திரிகளுடன் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் அதிகாரபூர்வமாகச் செய்தியாளர்களிடம் கூறப்படவில்லை. ஆனால் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய விபரங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டு இராஜதந்திரிகளின் அபிப்பிராயங்களும் பெறப்பட்டதாக மாத்திரமே ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியிருந்தது.

ஆனால் இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்தும் நிதிகளைப் பெறுவதற்குரிய வகையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் பற்றி மிகைப்படுத்தப்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்பட்டதாகவே அறிய முடிகின்றது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் நிரந்தர அரசியல் தீர்வை கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையும் அதன் மூலம் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் உத்திகளும் இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் மிக நுட்பமாகக் கையாளப்பட்டுள்ளதாகக் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. இந்தச் சந்திப்புத் தொடர்பாக சென்ற வியாழக்கிழமை கொழும்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வெளிநாட்டு இராஜதந்திரிகளை அரசாங்கம் ஏமாற்றியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ரணிலின் அணுகுமுறை, இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை நிலைநிறுத்தக்கூடிய முறையிலான இலங்கைத்தேசியம் என்பதை மையப்படுத்தியே அமைந்துள்ளது என்று சஜித்துக்குப் புரியாமலில்லை. இருந்தாலும் தனது கட்சி அரசியல் நோக்கில் ரணில் அரசாங்கம் மீது குற்றம் சுமத்துகிறார். இதன் மூலம் பல உண்மைகள் வெளிக்கிளம்புகின்றன.

குறிப்பாக பதின்மூன்றைக் கொடுப்பது போல காண்பித்துக் கொண்டு வேறு காரணங்களைக் கூறி அதனைத் தாமதப்படுத்துவதும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள ஆபத்துக்கள் பற்றியும் சஜித் தனது கட்சி அரசியலுக்காகப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். ஆயினும் சஜித் வெளிப்படுத்தும் இந்த உண்மைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்க மளிப்பதன் மூலம், சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத்தமிழர்களுக்கு இழைத்த அநீதிகளை அரசியல் ஆதாரங்களுடன் வெளிப்படுத்த தமிழ்த்தரப்பால் முடியும். ஆனால் தனித்தனிச் சந்திப்புகளும் ஒருமித்த குரல் இல்லாத கோரிக்கைகளும் முன்வைக்கப்படுவதால், மிக இலகுவாகச் சிங்கள ஆட்சியாளர்களினால், தமிழ்த் தரப்பை வெட்டியோட முடிகின்றது. குறிப்பாக ரணில் இலகுவாகக் கையாளுகிறார். பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது என்பதற்கு அப்பால், அதில் உள்ள அதிகாரங்கள் பலவற்றைக் கொழும்பு நிர்வாகம் மீளப் பெற்றுள்ளது என்றும் வேறு சில அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமல் கொழும்பு நிர்வாகம் இழுத்துப் பிடிக்கின்றது எனவும் சட்ட ஆதாரங்களுடன் எடுத்துக் கூற வேண்டும். ஆனால் இந்தப் பணியைச் சட்டம் தெரிந்த தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்வதேயில்லை. "நிராகரிக்கின்றோம்" என்ற ஒற்றைச் சொல்லில் கூறி முடித்துவிட்டுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகங்களை வகுக்கும் செயற்பாடுகளில் மாத்திரமே ஈடுபடுகின்றனர். அதற்கேற்பவே மக்களையும் தயார்ப்படுத்துகின்றனர். ஆனால் அரசியல் விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துவதில்லை. இந்திய- இலங்கை ஒப்பந்தம் 1987 ஜுலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்தாகி, சில மாதங்களுக்குள் முரண்பாடுகள் உருவெடுத்தன. இதனால் ஆயுதப் போராட்டம் மீண்டும் ஆரம்பித்தது. அதுவும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் வல்லரசாக வர விரும்பும் இந்திய அரசின் இராணுவத்துடன் போர் மூண்டது. இந்தச் சூழலில் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்த ஈழத்தமிழர்கள் பதின்மூன்றுக்கு எதிராகவும் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புகள் பற்றியும் பிரஸ்தாபிக்க ஆரம்பித்தனர். 1988 ஏப்ரல் முப்பதாம் திகதியும் மே முதலாம் திகதியும் சர்வதேச தமிழ் மாநாட்டை ((International Tamil conference) 'தமிழ்த் தேசியப் போராட்டமும் இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தமும்' (Tamil National struggle and IndoLanka Peace Accord) என்ற தலைப்பில் உலகத் தமிழர் ஒன்றியம் லண்டனில் நடத்தியிருந்தது.

ஈழத்தமிழர்களுக்காக இந்திய மத்திய அரசின் நாடாளுமன்றம் வரை குரல் கொடுத்து வரும் வை .கோபாலசாமி, ஓய்வுபெற்ற இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் கிருஷ்ண ஐயர், பழ. நெடுமாறன் மற்றும் அமெரிக்க மனித உரிமை சட்டத்தரணி கரேன் பார்கர் (Karen Parker) உட்பட தமிழ்த்தேசிய கருத்தை பரப்புரை செய்யும் பலர் இந்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர். 1985 ஆம் ஆண்டு நேபாள நகரான திம்புவில் தமிழ் ஆயுத இயக்கங்களுடன் ஜே.ஆர் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட அடிப்படைகளின் பிரகாரம் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென இந்தமாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. பிரபல தமிழ்ச் சட்டத்தரணி என்.சீவரட்ணம் ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில் ரெலோ இயக்கத்தின் முன்னாள் பேச்சாளர் என். சத்தியேந்திரா, ஐக்கிய நாடுகள் சபை தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரியிருந்தார். திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் உட்பட வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

1978 ஆம் ஆண்டு இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் பிரகாரமும், 1988 இல் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் இணைக்கப்பட்ட உறுப்புரை 154 (3) இன் பிரகாரமும் ஏனைய மாகாணங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணை ஒன்றின் மூலம் இணைக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளன. அதாவது வடக்கு - கிழக்கு மாகாணம் மாத்திரமல்ல வடக்கு மாகாணத்துடன் வட மத்திய மாகணம், அல்லது மேல் மாகாணத்துடன் வடமேல் மாகாணம் போன்ற அருகருகாகவுள்ள மாகாணங்களை இணைக்க முடியும் என்றே பொருள்கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கு இணைப்பைப் பிரிக்க, ஜே.வி.பியினால் 2006 இல் இலங்கை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில், நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பு மிக முக்கியமானது. அதாவது வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்பாடுகளைக் கொண்டிருந்த மாகாண சபைகள் சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு மாறாக வடக்கு, கிழக்கு இணைப்பை நீடித்துச் சென்றமையானது அரசியலமைப்புக்கு முரணானது என்று நீதியர சர்கள் தமது தீர்ப்பில் விளக்கியுள்ளனர்.

ஆனால் மாகாணங்களை இணைப்பது அரசியல் யாப்புக்கு முரணானது என்றோ அல்லது மாகாணங்களை இணைக்க முடியாதென்றோ உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தமது தீர்ப்பில் கூறவில்லை. அதேநேரம் இருவேறு மாகாணங்களை இணைப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமும் இல்லை. சர்வஜன வாக்கெடுப்பும் தேவையில்லை. இது பற்றி பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் பற்றிய ஏற்பாடுகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

யாப்பில் கூறப்பட்டுள்ள இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு விளங்கப்படுத்தியுள்ளனர். குறிப்பாக வடக்கு= கிழக்கு மாகாணங்கள் சிங்கள பௌத்ததேசிய அரசியல் நோக்கில் பிரிக்கப்பட்டாலும், நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் மூலம் மீள இணைக்க முடியும் என்று நம்பக் கூடிய தகவல்கள் மற்றும் ஒற்றையாட்சியை நியாயப்படுத்தித் தமிழ் - முஸ்லிம் மக்கள் இந்த அரசியல் யாப்பு ஏற்பாடுகளின் மூலம் சகல உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய சூழல் இருப்பதாகவும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சிங்கள இராஜதந்திரிகள் ஏலவே சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தப் பின்னணியில் சென்ற பத்தாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற இராஜதந்திரிகளுடனான சந்திப்பிலும் இது பற்றிய மேலதிக விளக்கங்கள் கொடுக்கப்பட்டதாகவே தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இராஜதந்திரிகளும் அதனை ஏற்றுள்ளனர் என்றும் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் விரிவாகப் பேசி அழுத்தம் கொடுப்பதாக இராஜதந்திரிகள் சிலர் உறுதி வழங்கியதாகவும் அறிய முடிகின்றது. ஆகவே அடுத்த சில வாரங்களில் இராஜதந்திரிகள் தமிழ்த் தலைவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் பதின்மூன்றில் உள்ள ஏற்பாடுகள் எதுவும் நடைமுறையில் சாத்தியப்படக்கூடியவையல்ல. அதுவும் வடக்கு- கிழக்கை இணைக்க இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக்கூடப் பெற முடியாது என்ற அரசியல் உள்நோக்கங்களைக் காரண காரியத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குறிப்பாகத் தமிழரசுக் கட்சி எழுத்து மூலம் புரிய வைக்க வேண்டும். சம்பந்தன் இது பற்றி நாடாளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகளில் விபரித்திருக்கிறார். குறிப்பாக பதின்மூன்றை தும்புத் தடியாலும்கூடத் தொட்டுப் பார்க்க முடியாதென்றும் அதற்குரியவாறு பதின்மூன்றில் உள்ள அதிகாரமற்ற பலவீனங்கள் பற்றியும் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஆதாரங்களுடன் விபரித்திருக்கிறார். சம்பந்தன் ஆங்கிலத்தில் நிகழ்த்திய அந்த உரைகளை நூலாக வெளியிட்டாலே இலங்கை அரசாங்கம் குறிப்பாகச் சிங்கள ஆட்சியாளர்கள் பதின்மூன்று பற்றிக் கூறுகின்ற அத்தனை பொய்களும் வெளிச்சத்துக்கு வரும்.

இந்த உண்மைகளை வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஏற்கனவே அறிந்திருந்தாலும், இந்தோ - பசுபிக் பிராந்திய அரசியல் - பொருளாதாரப் போட்டிகளினால் இலங்கை அரசாங்கத்தைத் தம் பக்கம் இழுக்கும் விதமாகவே அரசியல் நகர்வுகளை மேற்கொள்வர் என்பது கண்கூடு. ஆனால் புவிசார் அரசியல் - பொருளாதார போட்டிகள் மற்றும் அரசியல் கொதிநிலைமைகளுக்கு ஏற்ப தமிழரசுக் கட்சி பதின்மூன்று பற்றியும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள ஆபத்துகள் பற்றியும் ஆதாரங்களோடு எடுத்துச் சொன்னால் விரும்பியோ விரும்பாமலோ, அமெரிக்க - இந்திய அரசுகள் செவிசாய்க்க வேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் உருவாகும். ரணில் கையாளும் ஆபத்தான அரசியல் பொறியை (Political Trap) உடைத்து தமிழர்களுக்கு எதிரான அநீதிகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்க் கட்சிகளுக்கே உண்டு. சஜித்துக்கும் ஜே.வி.பிக்கும் அந்தத் தேவை இல்லையே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2

# வடபகுதியில் தொலைமருத்துவ சேவையை வழங்கும்

# சர்வதேச விசேட மருத்துவ வல்லுநர்கள்



பேராசிரியர் ரூபவதனா மகேஷ்பரன்

**Prof. Rupavathana(Ruby) Mahesparan MD, PhD**

○ **பா.துவாரகன்** ,
அபிவிருத்தி உத்தியோகத்தர் (பொறுப்பு)
மருத்துவ அருங்காட்சியகம் மற்றும்
தொலைமருத்துவப் பிரிவு
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்

நோர்வே நாட்டில் நரம்பியல் சத்திரசிகிச்சை விசேட மருத்துவ நிபுணராகவும் பேகன் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் அறுவைச் சிகிச்சைத் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் கடமையாற்றும் ரூபவதனா மகேஷ்பரன் 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி சாவகச்சேரியில் பிறந்தவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் விசேட திறமைச் சித்தியையும் உயர்தரப் பரீட்சையில் அதிவிசேட திறமையையும் வெளிப்படுத்தி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குத் தெரிவானார்.

தனது 13 ஆவது வயதில் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்த ரூபவதனா பாடசாலை மாணவியாக இருந்த காலத்தில் சங்கீதம், நாடகம், ஆங்கிலப்பேச்சு, விளையாட்டு என்பவற்றில் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்தி சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்ததுடன் பாடசாலை வலைப்பந்தாட்ட அணி, மெய்வல்லுநர் அணி மற்றும் இல்ல விளையாட்டு அணித்தலைவியாகவும் திகழ்ந்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் 9 ஆவது அணியில் பயின்ற ரூபவதனா 2 ஆவது எம்.பி.பி.எஸ். பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியெய்தி உடற்கூற்றியல் பாடத்தில் தங்கப்பதக்கத்தை பெற்றதுடன், புள்ளி அடிப்படையில் முதல்நிலை மாணவியாகத் தெரிவானார். எதிர்பாராதவிதமாக ரூபவதனா யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் நோர்வேக்கு குடிபெயர்ந்து நோர்வேஜிய மொழியில் மருத்துவம் பயின்று மருத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றார். ரூபவதனா மருத்துவ மாணவியாக இருக்கும்போதே மூளையில் ஏற்படும் புற்றுநோய்க் கட்டிகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு முனைவர் பட்டத்தைப் (PhD) பெற்றிருந்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

மருத்துவராகி உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் நரம்பியல் சத்திரசிகிச்சைத் துறையில் விசேட நிபுணத்துவப் பயிற்சியைப் பெற்று ஹொக்கலாந்து பல்கலைக்கழகப் போதனா மருத்துவமனையில் முதலாவது பெண் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணராக 2005 இல் நியமனம் பெற்றதுடன் நோர்வே நாட்டின் 4 ஆவது நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் என்ற சிறப்பையும் பெற்றார்.

ரூபவதனா நரம்புகளில் ஏற்படும் புற்றுநோய் தொடர்பிலும் மண்டையோடு. அடி மூளைச் சுரப்பி சத்திரசிகிச்சையிலும் மூளையில் ஏற்படும் சிதைவுகளுக்கான (Gamma knife radiosurgery) ஃகாமா கதிர்களைத் துல்லியமாகச் செலுத்தி மேற்கொள்ளும் கதிரியக்கச் சிகிச்சைகளை மேற்கொள்வதிலும் விசேட நிபுணத்துவமும் அனுபவமும் பெற்றவர். மேலும் சிறுவர்களுக்குரிய மூளைநரம்பியல் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதிலும் நெடுநாளைய நரம்பியல் குறைபாடுகளுக்கு மேற்கொள்ளும் சத்திரசிகிச்சையிலும் சிறப்புத் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றவர். ரூபவதனா மகேஷ்பரன் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் நரம்பியல் சத்திரசிகிச்சைகளை அறிமுகம் செய்து பயிற்சி வழங்கும் பல்வேறு திட்டங்களின் தலைமைப் பொறுப்பிலும் செயற்பட்டு வருகின்றார்.

சில வருடங்களுக்கு முன்னர் எதியோப்பியாவில் இரட்டைத்தலையுடன் (Encephalocele) பிறந்த பெண்குழந்தை இரட்டைத்தலை காரணமாக நித்திரை கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தது. 2019 இல் ரூபவதனா நோர்வேயிலிருந்து எதியோப்பியாவுக்குச் சென்று 16 மாதங்களேயான இந்தப் பெண்குழந்தைக்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்டு பாலகியின் உயிரைக் காத்தார். ரூபவதனா தொண்டாகச் செய்த அரும்பெரும் பணிகளில் இதுவும் ஒன்று.

பேராசிரியர் ரூபவதனாவின் மருத்துவ ஆராய்ச்சிகள் நரம்புடன் தொடர்புடைய புற்றுநோயியல் மற்றும் சிறுவர்களுக்கான நரம்பியல் சத்திரசிகிச்சை ஆகியவற்றினைக் கருப்பொருளாகக் கொண்டவை. உள்ளூர் மற்றும் சர்வதேச மருத்துவ ஆய்வேடுகளில் இவரது 37 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

ரூபி நோர்வேஜிய சத்திரசிகிச்சைக் கழகத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகையின் கருப்பொருள் ஆசிரியராக 2013, 2017 ஆகிய ஆண்டுகளில் பதவி வகித்துள்ளார்.

சிறுவர்களது மூளைக் கலங்களில் ஏற்படும் கட்டிகள் தொடர்பில் நோர்வே நாட்டிற்குரிய வழிகாட்டல் குறிப்புக்கள் தொகுப்பின் ஆசிரியர்களில் ரூபவதனாவும் ஒருவர். நோர்வேயிலுள்ள பல்வேறு நரம்பியல் சிகிச்சைச் சங்கங்களின் இயக்குநர் சபைகளில் அங்கத்தவராகவும் சிலவற்றில் பணிப்பாளராகவும் விளங்குகின்றார். குறிப்பாக நோர்வேஜிய நரம்பியல் சிகிச்சை சங்கத்தின் தலைவராகவும், European Society for Stereotactic and Functional Neurosurgery (ESSFN) அமைப்பின் நோர்வே நாட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் இவர் விளங்குகின்றார்.

பேராசிரியர் ரூபவதனா நோர்வேயிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகவும் மருத்துவ முனைவர் பட்டப்படிப்பு (PhD) மாணவர்களது பரீட்சகராகவும் கடமையாற்றி வருகின்றார். 2005 முதல் வருடந்தோறும் இரு மாதங்கள் எதியோப்பியாவுக்குச் சென்று அடிஸ் அபாபா பல்கலைக்கழகத்தில் நரம்பியல் சத்திரசிகிச்சைத் துறையில் சிறப்புப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு விரிவுரையும் செயல்முறைப் பயிற்சியும் அளித்து வருகின்றார்.

**துறைசார் விசேட மருத்துவ வல்லுநர்கள் பங்குபற்றும் கதிரியக்கவியல் பூகோள தொலைமருத்துவக் கருத்தரங்கு (Global MultiDisciplinaryTeam Teleradiology Forum)**

1. நரம்பியல் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் ரூபவதனா மகேஷ்பரன் (நோர்வே), ஓய்வுநிலை நரம்பியல் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் கதிர் நடனச்சந்திரன் (அவுஸ்.) மற்றும் கதிரியக்கவியல் விசேட மருத்துவ நிபுணர் பொன். கேதீஸ்வரன்(அவுஸ்.) ஆகியோர் வியாழக்கிழமைகளிலும்
2. தசை வன்கூட்டு கதிரியக்கவியல் துறையில் விசேட பயிற்சிபெற்ற கதிரியக்கவியல் விசேட மருத்துவ நிபுணர் நிருசினி சத்தியகுமார்(நியூசிலாந்து) மற்றும் கதிரியக்கவியல் விசேட மருத்துவ நிபுணர் பொன். கேதீஸ்வரன்(அவுஸ்.) ஆகியோர் திங்கட்கிழமைகளிலும்
3. பேராசிரியர் குமரேசன் சந்திரசேகரன் (அமெரிக்கா), மற்றும் பேராசிரியர் சிவி எஸ். சிவா (அமெரிக்கா) ஆகியோர் வெள்ளிக்கிழமைகளிலும்
4. யாழ். போதனா மருத்துவமனையால் 2019 முதல் ஒழுங்குபடுத்தப்படும் பூகோள தொலைமருத்துவக் கதிரியக்கவியல் கருத்தரங்குகளில் காணொலி வழியாகப் பங்குபற்றி யாழ். போதனா மருத்துவமனைக்கும் இப்பிராந்திய மக்களுக்கும் தொடர்ச்சியாக வழங்கிவரும் தன்னார்வ மருத்துவ சேவையானது விலைமதிப்பற்றது.

**நரம்பியல் சத்திரசிகிச்சை கதிரியக்கவியல் பூகோள தொலைமருத்துவக் கருத்தரங்கு (Global MDT Neurosurgery Teleradiology Forum):**

இலங்கையின் வடபகுதியில் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணரையும் சத்திரசிகிச்சைக் கூடத்தையும் கொண்ட ஒரேயொரு அரச மருத்துவமனையாக யாழ். போதனா மருத்துவமனையே விளங்குகின்றது. யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றுபவரும் இலங்கையின் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முன்னணி நரம்பியல் சத்திரசிகிச்சை விசேட மருத்துவ வல்லுநர்களில் ஒருவருமான பொன்னம்பலம் ஆதித்தன் தலைமையிலான மருத்துவ நிபுணர் குழுவினர் தெரிவுசெய்யும் சிக்கலான நரம்பியல் சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய கதிரியக்கவியல் படங்களை சர்வதேச துறைசார் விசேட மருத்துவ நிபுணர்கள் வாராந்தம் வியாழக்கிழமைகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

இலங்கைக்கும் நோர்வே நாட்டுக்குமிடையில் குளிர், கோடை காலங்களுக்கு ஏற்ப 3.30 அல்லது 4.30 மணி நேர வேறுபாடு காணப்படுகிறது. வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் ரூபவதனா பல்கலைக்கழகத்துக்கு கடமைக்குப் புறப்பட முன்னர் காலை 6.30 மணிக்கு எம்மோடு காணொலி வழியாக இணைந்திருப்பார். எமது மருத்துவ நிபுணர்கள் தெரிவு செய்யும் நரம்பியல் சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய சிக்கலான கதிரியக்கவியல் படங்களை ரூபவதனாவும் ஏனைய மருத்துவ வல்லுநர்களும் ஆய்வு செய்து தீர்மானங்களை மேற்கொள்வார்கள்.

பேராசிரியர் ரூபவதனா மகேஷ்பரனை, நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் (Consultant Neurological Surgeon) பின்வருமாறு மதிப்பிடுகிறார்:

பேராசிரியர் ரூபவதனா யாழ். போதனா மருத்துவமனையால் ஒழுங்குபடுத்தப்பட்ட 81 இணையவழிக் கருத்தரங்குகளில் (2020 - 2023.04.12வரை) கலந்துகொண்டு மிகவும் ஆபத்து நிறைந்த நரம்பியல் சத்திர சிகிச்சைகளை மேற்கோள்ளும் போது பின்பற்ற வேண்டிய மாற்று வழிகளைப் பற்றியும் தனது அனுபவங்களையும் எம்மோடு பகிர்ந்து கொண்டமை இத்துறையில் எமக்குப் புதிய வழிகளைக் காண்பித்துள்ளது. கடந்த 3 வருடங்களில் பேராசிரியர் ரூபவதனாவும் ஏனைய சர்வதேச விசேட மருத்துவ நிபுணர்களும் நாம் தெரிவு செய்த மூளை முள்ளந்தண்டு நரம்பியல் தொடர்பான சிக்கலான சத்திர சிகிச்சைக்குரிய 500 நபர்களது கதிரியக்கவியல் படங்களை எம்முடன் இணைந்து பார்வையிட்டு சத்திரசிகிச்சைக்கு முன்னரும் சத்திரசிகிச்சை மேற்கொண்ட பின்னரும் நாம் முன்வைக்கும் வினாக்களுக்கு தரும் விளக்கங்கள் மிகவும் பெறுமதியானவை.


அண்மையில் ரூபவதனா அவர்கள் யாழ். போதனா மருத்துவமனைக்கு வருகை தந்து இங்குள்ள நரம்பியல் சத்திரசிகிச்சை அலகை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன் சத்திரசிகிச்சை உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் நன்கொடையாக வழங்கியமையானது யாழ். போதனா மருத்துவமனையில் நரம்பியல் சத்திரசிகிச்சைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பேருதவியாக அமைந்துள்ளது.

நரம்பியல் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் ரூபவதனா சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் மகேஷ்பரன் அவர்களின் மகளாவார்.


(தொடரும்)

கடந்த 2ஆம் திகதி சஞ்சீவியில் 'வடபகுதியில் தொலைமருத்துவ சேலவ வழங்கும் விசேட மருத்துவ வல்லுநர்கள்' தொடரில் பகுதி 1, கதிரியக்கவியல் **பேராசிரியர் மருத்துவர் குமரேசன் சந்திரசேகரன்** பற்றியது. தலையங்கமாக வர வேண்டிய மருத்துவர் குமரேசன் சந்திரசேகரன் அவர்களது பெயர் தவறுதலாகக் கட்டுரை எழுதிய பா. துவாரகனது பெயருடன் இடம் பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





து.திக்ஷாந்
தரம் 11
யா/மந்துவில்.
றோ.க.த.க.பா




அ.துவாரகன்
தரம் 11
யா/அச்சுவேலி
மத்திய கல்லூரி.




யதுஷியா,
தரம் - 9
யா/பாலையூர் சென்
அன்றனீஸ் றோ.க. மகளிர்
வித்தியாலயம்.



A.சகிதா
தரம் - 10
யா/மந்துவில் ஆர்.சி.எம்.
பாடசாலை



சி.அபிந்திகா,
தரம் - 2
யா/மானிப்பாய்
மகளிர் கல்லூரி



ந.கனிஸ்ரன்,
தரம் - 7
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி




# ஒழுக்கம் உயர்வு தரும்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது ஆன்றோர் வாக்காகும். செல்வம், பதவி, கல்வி என்னும் உயர்ச்சிகள் எல்லாம் ஒழுக்கத்துக்கு ஈடாக முடியாது. பணம் படைத்த செல்வந்தர் பலர் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காததால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு நிம்மதியிழந்து வாடுகின்றனர்.

ஒழுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தையல்ல. அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல நற்பண்புகளின் சேர்க்கையாகும். ஒழுக்கத்தை வளர்ப்பதில் பெற்றோர், ஆசிரியர் சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து ஒழுக்கத்தைப் பேணவேண்டும். அன்றாடம் தமது சொந்தக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து பெற்றோரை, பெரியோரைக் கனம் பண்ணுதல்; பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லுதல், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல், பணிகளை தவறாது செய்வதுவரை ஒழுக்கத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

பெற்றோர் தம் பிள்ளைகளை சுயநலம் அற்றவர்களாகவும் பிறருக்கு உதவும் சிந்தனை உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டும். தர்மத்தை, நீதியை, ஒழுக்கத்தைப் போதிக்கும் கதைகளை வாசித்தல், மகிழ்ச்சியான பொழுது போக்கு அம்சங்கள், போதுமானளவு விளையாட்டு ஆகியவை சிறுவர்களிடையே ஒழுக்கமுள்ள மனப்பான்மையை வளர்க்கும்.



## கரட் தினம்

கரட்டின் நன்மைகளையும் அதன் ஆரோக்கிய பயன்களையும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 4 ஆம் திகதி சர்வதேச கரட் தினம் கொண்டாடப்படுகிறது.

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## விக்கல்





நெஞ்சுப் பகுதியையும், வயிற்றையும் பிரிக்கும் தசையின் பெயர் உதரவிதானம். இந்தத் தசையில் ஏற்படும் துடிப்புத்தான், விக்கல். இந்தத் தசைத் துடிப்பு ஏற்படும்போது, நுரையீரல் சுருங்கி விரிவதில் சிரமம் ஏற்பட்டு, தொண்டையின் குரல் நாளம் வழியாக சத்தத்துடன் விக்கல் வருகிறது.

வாயுக்கள் நிறைந்த பானங்கள் அருந்தும்போது, வேகமாகச் சாப்பிடும்போது, வயிறு நிரம்பச் சாப்பிடும்போது இந்தப் பிரச்சினை ஏற்படும். விக்கல் ஏற்படும்போது பயமுறுத்தினாலோ, அதிர்ச்சியான செய்தியைச் சொன்னாலோ, உடல் உள் உறுப்புகள் சில நொடி அதிரும். உடலில் உள்ள நரம்பு இயக்கம், சுவாசம், நுரையீரலின் இயக்கம் ஓரிரு நொடிகள் நின்று, மீண்டும் செயற்படும். இதனால், விக்கல் நின்றுவிடும்.

ஆனால், இந்த சுய மருத்துவ முறை மிகவும் தவறு. ஓரிரு நொடிக்குமேல் அதிர்ச்சியில் நரம்பு இயக்கங்கள் நின்றுவிட்டால், பெரிய பிரச்சினை ஏற்படும். [illegible] விக்கல் வரும்போது, மெதுவாக நீர் அருந்தவும். 10 நொடிகள் வரை மூச்சை இழுத்துப் [illegible]

## வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வளரும் எழுத்தாளர்களுக்கு நான் எப்போதும் சொல்ல விரும்புவது வாசிப்பைத் தொடர வேண்டும் என்பது தான். வாசிப்பதனூடாகத் தான் எழுத்தின் எல்லை எதுவரை செல்கிறது என்பதை இளம் எழுத்தாளர்களால் உணர முடியும்.

# “கோட்பாடுகளுக்குள் என் எழுத்து சிக்குவதில்லை!”

## பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளி தாட்சாயணி

தாட்சாயணி என்று படைப்புலகில் அறியப்படும் திருமதி பிரேமினி பொன்னம்பலம், சங்கத்தானை சாவகச்சேரியைப் பூர்விகமாகக் கொண்டவர். சங்கானை பிரதேசசெயலராகப் பணிபுரியும் இவர், விஞ்ஞானமாணிக் கற்கையையும், தொடர்ந்து பிராந்திய திட்டமிடலில் முதுமாணிக் கற்கையையும் யாழ். பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தவர். மிக நீண்டகாலமாக எழுத்துத்துறையில் இயங்கிவரும் **பெண் ஆளுமையான தாட்சாயணி, உதயன்-**சஞ்சீவி வாசகர்களோடு தன் இலக்கிய அனுபவங்களை இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

நேர்கண்டவர் : வெற்றிவேல் சக்திவேல்

**கே: உங்களது எழுத்துத் துறைப் பயணத்தில் எழுதுவதற்கு உந்துசக்தியென எவற்றைக் கருதுகிறீர்கள்?**

ப: எழுதுவதற்கு உந்துசக்தியாக இருந்தவை என்றால் போட்டிகள், பரிசுகள், பாராட்டுகள் என்பவற்றைத் தான் குறிப்பிடவேண்டும். ஒரு தடவை எழுதி அது மற்றவர்களை ஈர்க்கவில்லை என்றால் ஆரம்ப காலங்களில் மனம் சோம்பிப் போய் விடும். இப்போது அப்படி இல்லை. பாடசாலைக் காலத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றித் தெரிவு செய்யப்படும் போது கிடைக்கும்



பாராட்டுக்கள், ஆசிரியர்களது ஊக்குவிப்புகள் என்பவற்றை எனக்கான ஊக்க மருந்துகளாக எடுத்துக்கொள்வேன். பாடசாலைக் காலத்தில் அதிகமாகக் கவிதைகள் எழுதுவேன். உயர்தரம் படித்துக் கொண்டிருந்த போது பி.பி.சி. தமிழோசை இளம் தமிழ்க் கவிஞர் எனும் பெயரில் நடத்திய உலகக் கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றேன். அப்போது தமிழகத்தில் வெளிவந்த சுபமங்களா இதழில் அதன் ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் அந்தக் கவிதை ஒன்றே தனக்கு ஆறுதலாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அக்காலப்பகுதியிலேயே சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாடகப் பிரதியாக்கப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. ஏதோ ஒரு விழாவில் மேடையேற்றுவதற்காக அந்தப் பிரதி கோரப்பட்டது. 'இரத்தச் சுவட்டில் இணைந்த இதயங்கள்' எனும் பெயரில் ஒரு நாடகப் பிரதியை எழுதிவிட்டு முடிவை அறிவதற்காக அறிவித்தல் பலகையை ஒவ்வொரு நாளும் பார்ப்பேன். ஒரு நாள் அப்போட்டி முடிவுகள் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. எனது நாடகம் மூன்றாம் இடம் பெற்றிருந்தது. அது ஒரு சமூக நாடகம். முதலிடம் பெற்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. அது ஒரு சரித்திர நாடகம். அம்முடிவு வந்து சில நாள்களின் பின் அங்கு கற்பித்துக் கொண்டிருந்த தமிழாசிரியர் முத்துலிங்கம் என்னை அழைத்தார்.

எனது நாடகப்பிரதி என்னால் சுயமாக எழுதப்பட்டிருப்பதைத் தான் உணர்வதாகவும், மேடைக் கவர்ச்சிக்கு உகந்ததாக அந்த அரச நாடகம் அமைந்ததனால் அதனைத் தெரிவு செய்ததாகவும் கூறித் தொடர்ந்தும் எழுத உற்சாகப்படுத்தினார். அவர் எனக்கு ஒருபோதும் கற்பித்தவரல்லர். எனினும், எனது நாடகம் மேடையேற்றப்படாவிட்டாலும், அவ்வாறு ஒரு ஆசிரியர் என்னைத் தனியே இனங்கண்டு பாராட்டியது எனக்கு உந்துசக்தியாக இருந்தது. ஈழநாதம் இரண்டாம் ஆண்டுச் சிறுகதைப் போட்டியில் எனது 'புல்லாங்குழலும் ஒரு புலிவீரனும்' எனும் சிறுகதை மூன்றாம் பரிசு பெற்றது. ஏதோ ஒரு நிகழ்வில் எழுத்தாளர் சொக்கன் என் கதையைச் சிலாகித்துப் பேசியதாக வேறொருவர் மூலம் என்னால் அறிய முடிந்தது. அதுவும் என்னைத் தொடர்ந்து எழுத ஊக்கமளித்தது. இவையெல்லாம் நான் தாட்சாயணி எனும் பெயரில் எழுத ஆரம்பிக்கும் முன்னர் ஆரம்ப காலங்களில் எனக்கு கிடைத்த உந்துசக்திகள். பரிசுகளை விட அங்கீகரிக்கப்படுதல் என்பது ஒரு பெரிய விடயமில்லையா? மேற்படி போட்டிகளிலெல்லாம் நான் முதலிடத்தைப் பெறவில்லை. போட்டிகளில் சில வரையறைகள், நடுவர்களின் வேறுபட்ட பார்வைக் கோணங்கள் இருந்திருக்கலாம். நான் மேற்சொன்ன சிறுகதை, நாடகப் பிரதிப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்றவர்கள் தற்போது இலக்கியத்தில் தொடர்ந்து இயங்குவதாகத் தெரியவில்லை. எனினும் மேற்குறிப்பிட்டவர்களால் என்க்கு வழங்கப்பட்ட உற்சாகமே நான் தொடர்ந்தும் இலக்கிய உலகில் இயங்குவதற்குக் காரணம் எனக் கருதுகிறேன்.

**கே: கல்வி பயிலும்போது அதுசார்ந்த படைப்பாக்க முயற்சிகளிலும் ஈடுபட்டதுண்டா?**

ப: நான் உயர்தரத்தில் கணிதம் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் பாடசாலை விஞ்ஞான சஞ்சிகையான அறிவியல் ஊற்று வெளிவந்த போது அதில் எனது அறிவியல் பூர்வமான கவிதைகள், கட்டுரைகள் வெளிவந்தன. தொடர்ந்து விஞ்ஞானபீட சஞ்சிகையான சக்கரத்தில் அறிவியல் கதை ஒன்றை முயற்சித்துப் பார்த்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக நங்கூரம் இதழ் வெளிவந்த போது எனது இரு அறிவியல் சிறுகதைகள் அந்தச் சஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றன.

**கே: பொதுவாகவே பெண் எழுத்தாளர்கள் என்றால், பெண்ணியக் கோட்பாட்டின் வழியேதான் அவர்களின் படைப்புகளும் இருக்கும். நீங்களும் அந்தக் கோட்பாட்டு வட்டத்துக்குள் தான் எழுதுகின்றீர்களா?**

ப: பெண்ணியம் சார் கோட்பாடுகள் என எந்த வட்டத்திற்குள்ளும் என்னைச் சுருக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. எனது எழுத்துக்களில் உணர்வுகள் சார்ந்த பிரதிபலிப்புக்களையே நான் அதிகமும் எழுதுகிறேன். மனிதாபிமானமே எனது பேசுபொருள். எமது சமூகத்தில் கூடுதலாக எந்த விடயத்திலென்றாலும் அதனால் பாதிப்பை எதிர்கொள்பவர்கள் பெண்களாக இருப்பதனால் எனது கதைகளின் பாத்திரங்கள் இயல்பாகவே பெண்களாக இருப்பதும் அவர்களுக்கான நியாயத்தை அங்கீகரித்தலையும் எனது கதைகள் இயல்பாகக் கொண்டு செல்கின்றன என நம்புகிறேன். எந்தக் கோட்பாடுகளை முன் நிறுத்தியும் என் கதைகள் அமைவதில்லை.

**கே: தொடர்சியாக இலக்கிய உலகில் இயங்கிக்கொண்டிருக்கும் உங்களின் என்னென்ன படைப்புகள் நூலுருப்பெற்றிருக்கின்றன? எந்தெந்த ஊடக, இலக்கியத்தளங்கள் உங்கள் படைப்புகளின் பிரசுரத்துக்கு உதவி புரிந்திருக்கின்றன?**

ப: இதுவரை ஏழு சிறுகதைத் தொகுதிகளையும், ஒரு கவிதைத் தொகுதியையும், ஓர் ஆன்மிகக் கட்டுரைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளேன். இவை தவிர கட்டுரைகள், சிறுவர் நெடுங்கதை ஒன்று, சில நாடகங்கள் என்பவற்றையும் எழுதியிருக்கிறேன். வெளிவந்த நூல்களில் 'ஒரு மரணமும் சில மனிதர்களும்', 'இளவேனில் மீண்டும் வரும்', 'தூரப் போகும் நாரைகள்', 'அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும்', 'ஒன்பதாவது குரல்', 'வெண்சுவர்', 'ராணியம்மா 'என்பன சிறுகதைத் தொகுதிகளாகும். 'யாருக்கோ பெய்யும் மழை' கவிதைத் தொகுதி. 'கடவுளோடு பேசுதல்' என்பது ஆன்மிகக் கட்டுரைத் தொகுதியாக அமைந்தது. ஆரம்பத்தில் இலங்கை வானொலியின் இதயசங்கமம், கவிதைக்கலசம் போன்ற நிகழ்ச்சிகளில் என் படைப்புகள் ஒலிபரப்பாகின. அவற்றின் தொகுப்பாளராக அக்காலப் பகுதியில் இருந்த அமரர் சிதம்பரம்பிள்ளை சிவகுமார் நன்றியோடு நினைவு கூரத்தக்கவர். எனது படைப்புகள் வெளிவந்த பத்திரிகைகளாக ஈழநாதம், தினகரன், உதயன், சஞ்சீவி, தினக்குரல், நமது ஈழநாடு, சங்குநாதம், தீம்புனல் ஆகியவற்றையும், இதழ்களாக சுபமங்களா, ஞானம், மல்லிகை, ஜீவநதி, வேடிக்கை, அம்பலம், வியூகம், தாயகம், யாத்ரா, கலைமுகம், உள்ளம் போன்றவற்றையும் குறிப்பிடலாம். இவை தவிர இன்றைய இணைய யுகத்தில் வல்லினம், ஊடறு, வாசகசாலை, சொல்வனம், பதாகை, காற்றுவெளி, நடு, அகழ் போன்ற இணையத்தளங்களிலும் என் படைப்புகள் வெளியாகியுள்ளன.

**கே: உங்களுக்குக் கிடைத்த இலக்கிய விருதுகள், பரிசுகள் பற்றி..?**

ப: நான் முதலிலேயே கூறியது போல பி.பி.சி இளம் தமிழ்க் கவிஞர் தேர்வில் பரிசு கிடைத்த காலப்பகுதியில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கவிதைப் போட்டியிலும் பங்குபற்றித் தங்கப்பதக்கம் பரிசாகப் பெற்றேன்.

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

## கடவுள்

## திரைப்படம்?

இராகவன்



உடனடியாகச் சொல்வதற்கு ஏதுமில்லை. பிறக்கும் போதே கூடப்பிறந்த கெட்ட பழக்கம். பிறருக்கு சாதாரண பொழுதுபோக்குத்தான். ஆனால் எனக்கு வெறும் பொழுதுபோக்கல்ல. சொந்தமாகத் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தவரெல்லாம் தெய்வமாகவே தோன்றியதொரு காலம். வயது வேறுபாடில்லாமல் நடிகைகளைக் காதலிக்கப் பழகிக் கொண்டேன். வாயால் ஒலியெழுப்பிச் சண்டையிடக்கற்றுக்கொண்டேன். பாடல்களுக்கு வாயசைக்கக் கூடியவனாக மாறினேன். தொலைக்காட்சிப் பெட்டியைச் சொந்தமாக வைத்திருந்தவர்களின் வீட்டு வாசலில் பிச்சைக்காரனைப் போல் தவங்கிடந்திருந்தேன். எங்கெல்லாம் திரைப்படமோடுகிறதோ அங்கெல்லாம் இரவிரவாக ஓடிக்கொண்டிருந்தேன். நடிகைகளின் முகவரிகளைத் தேடியெடுத்துப் பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தேன். பதில் கிடைப்பது சர்வநிச்சயமென நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் நான் காதல் கடிதம் எழுதி அனுப்புகின்ற நடிகைகளுக்கெல்லாம் மறுவாரமோ மறுமாதமோ வெகுவிமரிசையாகத் திருமணம் நடப்பதை வார இதழ்களில் பார்த்து மனம் வெதும்பி அழுதிருக்கிறேன். திருமணமான நடிகைகளையெல்லாம் நம்பிக்கைத் துரோகிகளின் பட்டியலில் சேர்த்துக்கொண்டேயிருந்திருக்கிறேன்.

இதெல்லாம் எனக்கு மட்டுமானதல்ல. என் போன்ற இந்தக் கெட்ட பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கெல்லாம் பொதுவானது என்பதை நன்குணர்ந்து கொண்டபோது ஒடுங்கத் துவங்கியிருந்தேன். திரைப்படம் பார்க்கவே முடியாத காலமொன்று வந்திருந்தது. திரும்பவும் பார்க்கக் கூடிய காலம் வந்தபோது நான் பார்க்கத் தவறியிருந்தேன். அதாவது திரைப்படங்களைப் பார்க்கத் தோன்றவில்லை. நான் தமிழ்ப்படங்களை மட்டுமே பார்த்து வந்திருக்கிறேன். வேற்றுமொழிப்படங்களெதையும் இதுவரை நான் பார்த்ததில்லை. தமிழில் நல்ல திரைப்படங்கள் வருவதில்லை என மீசையுந்தாடியுஞ் சவரஞ்செய்து கொண்டிருப்போர் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ள போதிலும் நான் தமிழ்ப்படங்களை மட்டுமே பார்த்து வந்திருக்கிறேன். இனிப் பார்க்கவிருப்பதும் தமிழ்த் திரைப்படங்களைத்தான். நான் ஒடுங்கத் தொடங்கிய காலப்பகுதியில் திரைச்சுவடியொன்றை எழுதிப்பார்த்திருக்கிறேன். தலைப்பிடவில்லை. அப்போது அது அவசியமற்றதெனத் தோன்றியது. ஏதோவொன்றை எழுதிப்பார்க்கலாமெனத் தொடங்கினேன். பலர் வந்து செல்லக்கூடிய ஒரு களத்தை வடிவமைத்தேன். வந்து செல்வதற்கான விசேட காரணங்களேதும் குறிப்பிட்டிருக்கவில்லை. எல்லாமே அவரவர் ஊகத்தின் அடிப்படையில் நிகழ்வதுதான்.

17

அதாவது நீங்கள் அந்தக் களத்தில் முதன் முதலாக ஒருவரைச் சந்திக்கிறீர்கள். அவர் உங்களைக் கொல்வதற்காக வந்திருக்கிறார் என நீங்கள் ஊகிக்கிறீர்கள். இப்போது அதுதான் அவர் வருகைக்கான காரணமாக இருக்கும். இந்த வகையில் தான் அக்களத்தினுள் எல்லாம் நிகழ்கிறது. மெய்யாகவே அப்பா இறந்துவிட்ட போதிலும் இக்களத்தில் அவர் வந்து கொண்டேயிருக்கிறார். சிகரெட் புகையும் உளுந்து வடையும் கலந்து மணக்கும் போது அப்பா உயிர்ப்புடனிருப்பதை உணர்ந்து கொள்கிறேன். அப்பா தனது கூட்டாளிகளோடு வலம் வருகிறார். சேர்ந்து குடிக்கிறார். வாய்த்தர்க்கத்திலீடுபடுகிறார். முடிவில் கைகலப்பாகிறது. இதையறிந்து அம்மா விழுந்தடித்து ஓடி வர வேண்டிய அவசியமிங்கில்லை. ஏனெனில் அம்மாவுக்கு இங்கே இடமொதுக்கப்படவில்லை. எங்களது வீடும் ,சூழவுள்ள வீடுகளும் பனையோலைக் குடில்களாக இங்கே வரிசைப்படுகின்றன. எப்போதும் புகை சூழ்ந்து கொண்டிருக்கிறது. அப்பாவும் நானும் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளும் போதெல்லாம் விலகி நடக்கிறோம். பேசிக் கொள்வதற்கு எதுவுமில்லை. யாரோ என்னைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டேயிருப்பதாக உணர்கிறேன். அந்நபர் அப்பாவாகவுமிருக்கக்கூடும்.

ஏனென்றால் சாதரணமாக அவர் என்னை நேர டியாகச் சந்திக்கும் போதெல்லாம் பகைமை கொள்ளாமல் விலகிச் சென்றதேயில்லை.

இங்கே அம்மா முதற்கொண்டு நானெந்தப் பெண்ணையும் கொண்டு வரவில்லை. நான் மற்றும் சிலருடன் வழமையாகப் போய் வரும் பாதை விமான ஓடு பாதையாக மாறப்போகின்றதெனச் சிலர் தகவல் தருகிறார்கள். அவர்களை நான் நன்கறிவேன். ஆனால் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறமுடிய வில்லை. அதையொரு பெரும் விடயமாகக் கருத முடியாது. நிறமூட்டுவதற்காக இங்கே நான் நுனா மரத்தை மட்டுமே வைத்திருக்கிறேன். இதற்கு மேலதிகமாக அந்திப்பொழுதின் சூரிய ஒளி தொடர்ந்திருக்கிறது என்பது மேற்கை நோக்கிச் செல்வதற்கான ஓர் ஏற்பாடென்பது விளங்கும். இதனைத் தொடர்ந்து நான் பெரிதும் மதிக்கும்(பெரிதும் விரும்பும்) நபரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க நடுநிசியில் போனேன். மன்னிக்கவும் போகிறேன்.

முதலாவது மாடியில் அவரை வளர்த்திவிட்டு உற்றார், உறவினர், தொண்டர்கள், ஆதரவாளர்களெனெ எல்லோரும் சுற்றிவர ஆழ்ந்துறங்குகின்றனர். அவரை இராணுவப் பச்சைக் கம்பளத்தினால் போர்த்தியிருக்கின்றனர். ஒரேயொருவர் மட்டும் விழித்திருக்கிறார். அவர் தான் பக்கிள் தவராசா. என்னைக் கண்டதும் பரபரப்புடன் ஓடி வந்து எதிர்கொள்கிறார். 'இதென்ன நேரங்கெட்ட நேரத்தில் இரங்கல் தெரிவிக்க வந்திருக்கிறீர்கள்? நீங்கள் வந்திருப்பது எனக்கு மட்டுந்தானே தெரியும்? நீங்கள் வருகை தந்ததாகச் சொன்னால் இவர்களில் எவரும் நம்பவே மாட்டார்கள். அதுவும் இந்த நேரத்தில் வந்ததாகச் சொன்னால் நான் பொய்யுரைப்பதாகத் தான் சொல்வார்கள்.'

அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே பூதவுடலை நெருங்கி அகவணங்கஞ் செலுத்தி விட்டுத் திரும்பி வரும் போது, 'இங்கே தற்காலிகமாக உறங்கிக் கொண்டிருப்பவர்களுக்காக நான் வரவில்லை. நான் பெரிதும் மதிப்பவருக்காகவே வந்தேன். எனது வருகையை இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. எனக்காக நீங்கள் வாதிட வேண்டாம். இரங்கல் தெரிவிப்பதற்குக் கால, நேரம் பார்க்க வேண்டியதில்லையென்பது உங்களுக்குத் தெரியுந்தானே? எனக்கு இப்போது தான் அவகாசம் கிடைத்தது. ஒருவருக்கு இரங்கல் தெரிவிப்பது விளம்பரமாகி விடுவதால் அதைத் தவிர்த்துக் கொள்ளவே இப்போது வந்திருக்கிறேன்' என அவரிடங்கூறிவிட்டு வந்துவிடுகிறேன்.

ஆனால் இங்கே எனது அயலவர் ஒருவர் காலமானபோது வேறுவிதமாக நடக்கிறது. இங்கே நான் மழை நாள் எதையும் தேர்ந்தெடுக்கவில்லை. இடம்பெறும் நாள்கள் அனைத்துமே சிறப்பான வெயில் நாள்களே தான். வெயில் எனக்கு எப்போதுமே வெகு உவப்பானதொன்று. வெயில், தாகத்தைக் கொண்டு வரக்கூடியதாக இருப்பதே இதற்கான முக்கியமான காரணங்களிலொன்றாகும். இந்த வெயில் உச்சியில் தகிக்கும் நாள் ஒன்றில் தான் அயலவரின் இறுதிச்சடங்கு நடந்து கொண்டிருக்கிறது. இவ்விறுதிச் சடங்கில் கலந்துகொள்வதைக் காரணங்காட்டி அலுவலகத்துக்கு விடுப்பு எடுத்திருந்தேன். அயலவர் என்பது எனது வீட்டுக்கு அடுத்த வீட்டையே இங்கே குறிப்பிடுகிறேன். அதாவது எனது படுக்கையறையும் அந்த வீடும் மிக நெருக்கமாகவேயிருக்கின்றன. இடையில் ஒரு மதில் தடுப்பாக இருக்கிறது. அவ்வளவுதான். அன்றைய தினம் மதியம் வரை ஆழ்ந்துறங்கினேன்.

இந்த உறக்கம் எனது வாழ்நாளில் சாத்தியமான ஆழ்ந்த உறக்கங்களின் வரிசையில் குறிப்பிடத்தக்க தொன்றாக விருக்கிறது. ஏனெனில் அயலவரின் இறுதிச் சடங்குக்கான ஏற்பாட்டின் போதான சந்தடிகளேதுமே எனதுறக்கத்தைச் சற்றும் பாதிக்கவில்லை. காலமான அயலவர் எனது பெருமதிப்பிற்குரியவரல்லவெனினும் புறக்கணிக்கத் தக்கவரல்லவென்பதால் உறக்கங்கலைந்ததும் உரிய ஏற்பாடுகளுடன் அங்கே சென்று கலந்துகொண்டேன். அங்கேயும் பக்கிள் தவராசா தான் என்னை எதிர்கொண்டார். 'என்ன அலுவலகத்திலிருந்து நேரே வருகிறீர்களா?' எனக் கேட்டார். நான் அவருக்கு மட்டும் கேட்கும் படி'இல்லை! ஆழ்ந்துறங்கிவிட்டு எழுந்துவருகிறேன்.' என்றேன். அவருக்கு என்னைப் பற்றித்தெரியும். அதனால் மேற்கொண்டு எதுவுங் கேட்கவில்லை.

(தொடரும்)

# நிழல்முக நண்பர்கள்...


- இராஜகிருபன்

திரையொளியில் வந்துபோகும் தீண்டா முகத்து
நிரைநண்பர் கூட்டம் நிழல்.
வேழமுடை வேந்தனுக்கும் ஆண்டிக்கும் தன்னிழல்

காலடியில் வீழும் கறுத்து.
மயிலின் நிழலென்ன? கார்மைக் குயில்மேனி
மெய்யழகோ பன்மடங்கு மேல்.
இணையவலை நண்பனோர் நாவை நனைத்துதவாத்
தூரநீர்; கானல்த் துளி.
நீயழுதால் சேர்ந்தழவும் நின்சிரிப்பில் இன்புறவும்
மாயநட்புக் குண்டோ உணர்வு?

நிழல்நண்பா நீயென்? மரந்தரும் காய்தண்
நிழலுமின்னும் முற்றத்தில் நின்று.

வலைநண்பர் வாழ்விற் கலையும் உழைப்புநேரம்
உள்ளமுடல் மின்னுடன் ஐந்து.
உளமடையும் இன்பம் மறுநாள் உளமுடையும்
ஊறுநிழல் நட்பினுக் குண்டு.
விம்பநண்பர் கூட்டமேவீண்; மெய்த்தோழர் நான்குபோதும்
நம்மைத்தோழ் மேலுயர்த்தும் நம்பு.
வெளித் திரையினை விட்டெழுந்து வாவெளியே
நல்லநண்பர் நால்வரைத் தேடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கோட்பாடுகளுக்குள்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)




அவுஸ்திரேலிய விக்டோரியாச் சங்கத்தின் சிறுகதைப் போட்டி, லண்டன் பூபாளராகங்கள் சிறுகதைப் போட்டி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பவள விழாச் சிறுகதைப் போட்டி ஆகியவற்றில் பரிசுகள் கிடைத்தன. மல்லிகை , கலைமுகம் ஆகிய சஞ்சிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டிகளிலும் என் கதைகள் பரிசு பெற்றன. தொடர்ந்து ஞானம் சஞ்சிகையால் நடத்தப்பட்ட சிறுகதைத் தொகுப்புப் போட்டியில் பரிசு பெற்றே எனது முதல் சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டது. அவை தவிர ஒன்பதாவது குரல் தொகுப்புக்கு சாகித்திய விருதும், இளவேனில் மீண்டும் வரும், ராணியம்மா, யாருக்கோ பெய்யும் மழை ஆகிய தொகுப்புகளுக்கு வட மாகாண சிறந்த நூல் பரிசுகளும் கிடைத்தன. தமிழகத்தில் ஸீரோ டிகிரி பதிப்பகம் நடத்திய குறுநாவல் போட்டியில் எனது 'தீ நிழல் 'குறுநாவல் பரிசு பெற்றது.

**கே: படைப்பாக்கத்துறையில் எழுத்தாளர்கள் எதிர்கொள்ளும் முதலாவதும், பிரதானமானதுமான பிரச்சினை அந்தப் படைப்புகளைப் பிரசுரம் செய்வதுதான். உங்களுக்கும் இவ்வாறான அனுபவங்கள் உண்டா?**

**ப:** எழுத்துத்துறை அனுபவங்களைப் பற்றிச் சொல்வதானால், ஆரம்ப கட்ட எழுத்தாளர்கள் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு ஆக்கங்களை அனுப்பும் போது ஏதோ ஒரு வகையில் வாசிப்பவரை ஈர்த்தாலன்றி படைப்புகள் பிரசுரமாகும் தன்மை குறைவாகவிருக்கும். ஆனால் ஒருவரின் எழுத்துக்கள் பிரசுரமாகி அவரது பெயர் பிரபலமாகி விட்டால் தொடர்ந்து அவரது ஆக்கங்களைப் பிரசுரிக்கும் தன்மை ஏற்பட்டு விடும். அவரது படைப்புகள் சாதாரணமாக இருந்தாலும் கூட. மேலும் ஒவ்வொரு இதழ்களும், பத்திரிகைகளும் தமக்கென சில அரசியலையும், தனித்தன்மைகளையும் கொண்டிருக்கின்றன. அத்தன்மைகளுக்கு இசையும் படைப்புகளை அவை பிரசுரம் செய்கின்றன. எனது அனுபவத்தில் எழுதி அனுப்பி நிராகரிக்கப்பட்ட சில படைப்புகளை வேறு சில இதழ்கள் ஏற்றுப் பிரசுரித்துமிருக்கின்றன.

**கே: இலக்கியத்தில் நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்று புதிய திசைகள் திறக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இவை படைப்புகளில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றன?**

**ப:** நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்பன கால மாற்றத்தோடு இலக்கியத்தில் நிகழ்ந்த மாற்றங்கள். மரபின் வழியினின்று மீறி நவீனத்துவம் எனும் வடிவில் எழுத்தாளர்களின் கவனம் குவிந்தபின் அதுவும் பழைய வடிவமாகி பின்நவீனத்துவம் இன்னொரு வடிவமாகிறது. கால ஓட்டத்தில் அதுவும் இன்னொரு வடிவத்தை நாடிச் செல்லும். இலக்கியத்தில் நிகழும் இத்தகைய மாற்றங்களை வாசகனின் கவனத்தைக் கோரும் மாறுபட்ட உத்தி வகைகளாகவே கருதுகிறேன். எவ்வடிவத்தில் எழுதப்பட்டாலும் அப்படைப்பு வாசகனின் மனதிலொரு அசைவை ஏற்படுத்தாது விடின் அவ்வடிவ உத்தியால் பயனில்லை என்று தான் சொல்லவேண்டும்.

**கே: உங்களைப்போல சுயம்புவாக ஒரு இளைய படைப்பாளி உருவாவதற்கு என்ன செய்யவேண்டும்?**

**ப:** வளரும் எழுத்தாளர்களுக்கு நான் எப்போதும் சொல்ல விரும்புவது வாசிப்பைத் தொடர வேண்டும் என்பது தான். வாசிப்பதனூடாகத் தான் எழுத்தின் எல்லை எதுவரை செல்கிறது என்பதை இளம் எழுத்தாளர்களால் உணர முடியும். எழுத்தில் காலத்துக்கு காலம் நிகழும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு தொடர்ந்து பயணித்தலுக்கு வாசிப்பு மிக முக்கியம். அதிலும் தாய்மொழியோடு மட்டும் நின்றுவிடாது உலக இலக்கியங்களின் மொழிபெயர்ப்புக்களையும், முடிந்தால் அவற்றின் (மொழி தெரிந்தால்) மூலப்பிரதிகளையும் வாசிப்பதன் மூலமே அவர்களின் எழுத்து சரியான திசையில் நகரும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

# யாழ்ப்பாண வரலாறு

O ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை



### 1926

கிளிநொச்சி,சாவகச்சேரி மருத்துவமனையின் கட்டடப்பணிகள் பூர்த்தியாக்கப்பட்டன.

### 1927 மார்ச் 31

வட்டுக்கோட்டை மலாயா சங்கத்தின் முதலாவது வருடாந்தப்பொதுக்கூட்டம் கோலாலம்பூர் சிலாங்கூர் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. K. முருகேசன் தலைவராகவும் A. ஆறுமுகம் உப தலைவராகவும் N. சுப்பிரமணியம் செயலாளராகவும் S.முத்தையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். வைத்திலிங்கம்,சின்னத்துரை,கந்தையா,கணபதிப்பிள்ளை ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். கணக்காய்வாளர்களாக கதிரவேலு,கார்த்திகேசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### மே 1927

நவம்பர் மாதம் இலங்கைக்கு வருவதாக யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸுக்கு தந்தி அனுப்பினார் மகாத்மா காந்தி.முன்னதாக யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் மகாத்மாகாந்தியை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்திருந்தது.

### 1927 ஓகஸ்ட்

40 கட்டு யாழ்ப்பாண புகையிலை பரீட்சார்த்தமாக பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
தெல்லிப்பழை,கொக்குவில் போன்ற இடங்களில் புகையிரத நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின.

### 1927 செப்ரெம்பர் 15

மகாத்மாகாந்தியை வரவேற்பது தொடர்பான கூட்டமொன்று றிட்ஜ்வே மண்டபத்தில் சட்டசபை உறுப்பினர் வைத்திலிங்கம் துரைசாமி தலைமையில் நடைபெற்றது.





Gandhi addressing students of Ananda College



Gandhi is at Maligakanda, Temple, Colombo

### 1927 ஒக்ரோபர் 01

மகாத்மாகாந்தியை பருத்தித்துறைக்கு வரவேற்பது தொடர்பான கூட்டமொன்று பருத்தித்துறை பொலிஸ் நீதிமன்ற நூலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் காந்தியின் 'காதி நிதிக்கு' நிதி சேகரித்துக்கொடுப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இந்தக்காலப்பகுதியில் சட்டசபையில் யாழ்ப்பாணத்துக்கு கிறிஸ்தவப் பிரதிநிதி ஒருவர் தேவை என யாழ்ப்பாணத்திலுள்ள சில கிறிஸ்தவ அமைப்புகள் வலியுறுத்தின. இதற்கு கிறிஸ்தவர்களிடமிருந்தே எதிர்ப்பும் கிளம்பியது.
மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக பம்பாயிலிருந்து படகு ஒன்றை ஏற்பாடு செய்து தருவதாக இந்திய ஆளுநர் Viceroy உறுதியளித்தார். இந்தப் படகு நவம்பர் 2 ஆம் திகதி அல்லது 9 ஆம் திகதி பம்பாயிலிருந்து (இப்போதைய மும்பை) புறப்படும் எனவும் இந்திய ஆளுநர் உறுதியளித்தார்.

### 1927 நவம்பர்

மகாத்மாகாந்தி நவம்பர் பத்தாம் திகதி வியாழக்கிழமை கொழும்பு வருவார் எனவும் இருபதாம் திகதி யாழ்ப்பாணம் வருவார் என்றும் தகவல் கிடைத்தது.
ஐசாக் தம்பையா யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய சுவாமி விபுலானந்தர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

### 1927 நவம்பர் 13


மகாத்மா காந்தி கொழும்புக்கு வந்தார்
பாரியார் சகிதம் கொழும்பை வந்தடைந்த காந்திக்கு கொழும்புத் துறைமுகத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது துறைமுகத்தில் இருந்து காந்தி கொட்டா வீதியிலிருந்த வரவேற்புக்குழுவினருள் ஒருவரான ஆறுமுகத்தின் வீட்டுக்குச் சென்றார்.

### 1927 நவம்பர் 26

காந்தி தம்பதியருடன் ராஜாஜி தம்பதியர், திரு. தேசாய் ஆகியோர் விசேட முதல் வகுப்பு பெட்டியில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வந்திறங்கினர். காந்தியின் வருகையை முன்னிட்டு விசேட மேடைச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன புகையிரத மேடை நிரம்பி வழிந்தது. புகையிரத நிலைய வீதியும் மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது. புகையிரத நிலையத்தில் வைத்து, சேர்.வைத்திலிங்கம் துரைசாமி காந்தியை வரவேற்றார். புகையிரத நிலையத்தில் இருந்து காரில் மணிக்கூட்டு கோபுரத்தின் அருகிலுள்ள சேர்.வைத்திலிங்கம் துரைசாமியின் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் காந்தி . காந்தி யாழ்ப்பாணம் வந்த வேளையில் சேர்.பொன். இராமநாதன் கொழும்பு சென்று விட்டார். பாடசாலை மாணவனான ஹன்டி பேரின்பநாயகமே, காந்தியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்திருந்தார். இது தனக்கு கௌரவக்குறைச்சல் என்ற காரணத்தாலேயே சேர்.பொன்.இராமநாதன், காந்தியை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது.
எனினும் பின்னர் கொழும்பில் வைத்து காந்தியைச் சந்தித்தார் இராமநாதன்.
பிற்பகல் 3.00 மணிக்கு முற்றவெளியில் காந்தி உரையாற்றினார். முற்றவெளியில் ஆண்கள் , பெண்கள், சிறுவர்கள் என அலைகடலென மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.
சேர்.வைத்திலிங்கம் துரைசாமி யாழ். நகர அபிவிருத்திக் குழு (UDC) தலைவர் கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றினர். ஒடுக்கப்பட்ட சாதியினரின் சார்பில் திரு. சோமசுந்தரம், போல் கந்தையா ஆகியோர் காந்தியிடம் மனுக்களை சமர்ப்பித்தனர்
. (ஏனையவர்களைப்போல் பேச்சளவில் நின்று விடாமல் சாதி, சமத்துவத்தை மேடையிலும் செயலில் செய்து காட்டியவர் தான் ஹண்டி) இரவு சேர்.வைத்திலிங்கம் துரைசாமி , காந்திக்கு இராப்போசன விருந்தளித்தார். இதில் அரசஅதிபர் மற்றும் உயரதிகாரிகள் உயர்மட்டப் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். 'காதி நிதிக்கு' நிதியுதவி வழங்கியமைக்காக பெண்களுக்கு நன்றி தெரிவித்தார் காந்தி.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளின் பெயரால்...!

○ கோகுலராகவன்

ஜிம் ஜோன்ஸ் (Jim Johns).

இந்தப்பெயரை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? 1978 இல் தன்னுடைய 900 பக்தர்களை விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட ஒரு அமெரிக்கப் பாதிரியார். சாதாரண குடும்பத்தில் பிறந்த ஜோன்ஸ் மூன்று தேவாலயங்களில் பாதிரியாராக இருந்து விட்டு தனியாக ஒரு சபையை மக்கள் கோவில் (people temple)என்ற பெயரில் தொடங்குகின்றான் .

ஆரம்பத்தில் கொஞ்ச மக்களே வந்தனர். தன்னிடம் வரும் பக்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஜோன்ஸ் ஒரு தந்திரத்தைக் கையாளத் தொடங்கினான். அமெரிக்காவில் கறுப்பர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர்.ஏதோ விதத்தில் பாதிக்கப்பட்டிருந்தனர் அவர்களைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான். உலகிலுள்ள மதங்களில் மூட நம்பிக்கை இல்லாத மதங்கள் என்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த மூடநம்பிக்கையை ஜிம்மும் பயன்படுத்திக்கொண்டான் . நடக்க முடியாத யுவதியை நடக்க வைத்ததாக நாடகம் ஆடினான்.

இது திட்டமிட்ட செயல் என்று அந்த யுவதி பின்னர் ஒப்புக்கொண்டாள். சி.ஐ.ஏ. எப்போதும் ஜிம்மை பின் தொடர்ந்து கொண்டிருந்தது .இதனால் ஜிம் தன் இடத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டான்.

ஒரு கட்டத்தில் தென்னமெரிக்க நாடான கயானாவுக்கு தன் சபையை நகர்த்தினான். அங்கே மிகப் பெரிய காட்டை வாங்கி "ஜோன்ஸ் ரவுண்" என்று பெயரிட்டு நகரத்தை உருவாக்கத் தொடங்கினான் . ஆயிரம் அடியார்களும்,அடியாட்களுமாக அங்கே ஜிம் வசிக்கத் தொடங்கினான். அடியாட்கள் நகரத்தை துப்பாக்கிகளுடன் காவல் காத்தனர். யாரும் தப்பி ஓட முடியாது.

## இருந்து கதைப்பம்

நல்ல சபை. ஏனென்றால் அவனது அடியார்களே நகரத்தை நிர்மாணிக்கும் வேலைக்காரர்களாகவும் வேலை செய்ய வேண்டும். இது கட்டாயம்.

பகல் முழுவதும் கடும் வேலை . வேலை செய்யாவிட்டால் அடியாட்களின் தண்டனை கிடைக்கும். வேலை செய்து களைத்துப் போய் "அப்பாடா படுப்பம் "என்று படுக்க தலை சாய்க்கும் போது ஜிம் தன் பிரசங்கத்தை ஒலிபெருக்கியில் தொடங்குவான் . படுத்த மாதிரித்தான். குழந்தைகள் குழப்படி செய்தால் தகர டப்பாக்களில் பூட்டி வைப்பதே தண்டனை. தாய், தகப்பன், பிள்ளைகள் பிரித்தே தங்கவைக்கப்பட்டார்கள் . சபையில் சேர்வோர் தமது சொத்துக்களை சபைக்கு எழுதி வைக்கவேண்டும்.

ஜிம்மின் வாழ்க்கையோ சுகபோகமாகவே இருந்தது.

இடையில் ஜிம்மின் சித்திரவதைகள் வெளிவரத்தொடங்கின. கயானா அரசாங்கம் கண்டு கொள்ளாமல் இருந்தது. தங்கள் உறவினர்களை மீட்டுத் தரும்படி மக்கள் அமெரிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர்.

அமெரிக்கா, தனது காங்கிரஸ் உறுப்பினர் லியோ ராயன் என்ற உறுப்பினரை ஜிம்மின் நகரத்தை ஆய்வு செய்ய அனுப்பியது. அங்கு லியோ ராயன் சிலரைப் பேட்டி கண்டார்.

அவர்களில் இருபது பேர் வரை அங்கிருந்து வெளியேற விருப்பம் தெரிவித்தனர். இது ஜிம்மைக் கடுப்படைய வைத்தது. அங்கிருந்த சிலர் இரகசியமாக லியோ ராயனை எச்சரித்தனர். இதனால் ராயன் தன்னுடன் வர விரும்பியவர்களை அழைத்துக்கொண்டு கயானா விமான நிலையம் சென்றார். காங்கிரஸ் உறுப்பினர் லியோ ராயனுடைய தற்பாதுகாப்பு பலவீனமானதாக இருந்தது.

அவரைப் பின் தொடர்ந்த ஜிம்மின் ஆட்கள் விமான நிலையத்தில் வைத்து லியோ ராயன் உட்பட ஐந்து பேரை சுட்டுக்கொன்று விட்டார்கள். லியோ ராயன் என்ற காங்கிரஸ் உறுப்பினரை சுட்டுக்கொன்ற பின் ஜிம் தன்னை சூழப்போகும் ஆபத்தை உணர்ந்து கொண்டான். தப்ப வழியில்லை.

தன் பக்தர்களிடம் "நாம் சொர்க்கத்துக்குப் போவோம்" என அழைப்பு விடுத்தான். அனைவரையும் தன் முன் கூடிநிற்குமாறு கூறிவிட்டு, குளிர்பானத்தில் நஞ்சைக் கலந்து கொடுக்கச் சொன்னான்.

"இறைவன் அழைக்கிறான் வாருங்கள் போவோம்."

எனக் கட்டளை இட்டான். சிறுவர்களும் நஞ்சூட்டப்பட்டனர். ஜிம் தன்னைத்தானே சுட்டுக்கொன்றான்கயானா இராணுவம் காட்டுக்குள் இருந்த நகரத்தை அடையும் போது அங்கே கண்ட காட்சி தலை சுற்ற வைத்தது. தொள்ளாயிரம் சடலங்கள் மைதானத்தில் பரவிக்கிடந்தன.

ஜிம் தன்னைத்தானே கடவுள் என்று சொல்லிக்கொண்டு அப்பாவி மக்களைக் கொன்று குவித்தவன்.அப்பாவி இளம் பெண்களை தன் பாலியல் தேவைக்கு பயன்படுத்திக் கொண்டவன்.

ஆகக்குறைந்த சுய ஒழுக்கத்தையே கடைப்பிடிக்காதவன். அவன் எப்படி கடவுளாக முடியும்? எல்லாம் கைலாசத்தானுக்கே' வெளிச்சம்.

கமல்ஹாசன் ஒரு படத்தில் சொல்வார்: "கடவுள் உண்டு என்கிறவனையும் நம்பலாம். கடவுள் இல்லை என்கிறவனையும் நம்பலாம். ஆனால் நான்தான் கடவுள் என்கிறானே அவனை நம்பாதே". " ஜிம் ஜோன்ஸ் கடவுள் என்று தன்னைத்தானே சொல்லிக்கொண்ட பச்சைத்துரோகி.

# முன்றில் 4

○ இயல்வாணன்

மனிதர்கள் அகவை நிறைவைக் காண்பது பெரிய விடயமல்ல. ஆனால் ஒரு நிறுவனம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்வதென்பது பெரிய விடயமே. மார்க்ஸிய சிந்தனை வழிப்பட்ட ஒரு இடதுசாரிய அமைப்பின் இலக்கியக் குழுவாக உருவாக்கப்பட்டதே தேசிய கலை இலக்கியப் பேரவை. 1974இல் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு 50 ஆண்டுகளை நிறைவு செய்வதை முன்னிட்டு பரவலாக புத்தக அரங்க விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

'புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு , புதிய பண்பாடு ' என்பதை மகுட வாக்கியமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு மக்கள் இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்துச் செயலாற்றி வருகின்றது. யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, மலையகம் ஆகிய இடங்களில் தனது செயற்பாட்டினை மேற்கொண்டு வரும் இவ்வமைப்பு அந்த இடங்களில் பல்வேறு ஆய்வரங்குகளையும், கருத்தமர்வுகளையும், மாநாடுகளையும் நடத்தியுள்ளது. தேசிய கலை இலக்கியப் பேரவை வாசிப்பை ஊக்குவிப்பதில் பெரிதும் சிரத்தையெடுத்து வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. 2000 ஆண்டுகளில் கிராமங்களுக்கு வந்து மக்கள் மத்தியில் நூற்கண்காட்சிகளை நடத்தி, விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டது. சனசமூக நிலையங்கள், ஆலய மண்டபங்களை மையப்படுத்தி இந்தச் செயற்றிட்டம் அப்போது முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுகளில் கவிஞர் முருகையன் கலந்து கொண்டு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துரையாற்றியமை முக்கியமானதாகும். அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களையும் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஆய்வு, அறிவியல் எனப் பலதரப்பட்ட நூல்கள் தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன. குழந்தை ம.சண்முகலிங்கம், சி.சிவசேகரம், இ.முருகையன், மாவை வரோதயன், க.தணிகாசலம், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், சட்டநாதன், சுபைர் இளங்கீரன், மாதவி உமாசுதசர்மா, சோ.தேவராஜா, நந்தினி சேவியர், இரா.சடகோபன், முல்லை அமுதன், அழ.பகீரதன், சி.மௌனகுரு, சோ.கிருஸ்ணராஜா, கே.எஸ்.சிவகுமாரன், தாமரைச்செல்வி, நீர்கொழும்பூர் முத்துலிங்கம், சுபத்திரன், ந.ரவீந்திரன், தில்லைச்சிவன், செ.குணரத்தினம், சோ.பத்மநாதன், சுல்பிகா, மஹாகவி, இதயராசன், பவித்திரன், ரஞ்சகுமார், சுதாராஜ், சி.பற்குணம், இளவாலை விஜயேந்திரன், சபா ஜெயராசா, க.சிதம்பர நாதன் எனப் பலரது படைப்புகள் தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டு, மக்களிடம் அறிமுகப் படுத்தப்பட்டன. இந்தியாவின்'சவுத் ஏசியன் புக்ஸ்' என்ற நிறுவனத்துடன் இணைந்து பல நூல்கள் வெளியிடப்பட்டமையால் இந்தியாவிலும் ஈழத்துப் படைப்புகளை அறிமுகம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது.




தேசிய கலை இலக்கியப் பேரவை ஆரம்பிக்கப்பட்ட 1974ஆம் ஆண்டிலேயே 'தாயகம் 'என்ற சஞ்சிகையும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 7 இதழ்களுடன் நின்று போன இவ்விதழ் 1983ஆம் ஆண்டிலிருந்து ஓரளவு தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டுள்ளது. "தாயகம் சஞ்சிகை கலை கலைக்காக என்பதையும், வணிக நோக்குக்கு நிகரான மிக மலினப்படுத்தப்பட்ட இலக்கியப் போக்கையும் நிராகரித்து மக்கள் இலக்கியக் கோட்பாட்டை முன்னிறுத்தி சமரசமற்ற பாதையில் வழிநடந்து வந்துள்ளது. அத்துடன் அனைத்து முற்போக்கு, ஜனநாயக மக்கள் சார்பு கலை இலக்கியங்களை என்றும் வரவேற்று வருவதுடன் படைப்பாளிகளுக்கிடையேயான புரிந்துணர்வையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி வந்துள்ளது" என தாயகம் சஞ்சிகையின் 100 ஆவது இதழில் குறிப்பிடப்பட்டுள்ளமை அதன் நோக்குநிலையை வெளிப்படுத்தி நிற்கிறது.

'தாயகம் 'கலை இலக்கிய சஞ்சிகை மூலம் பல படைப்பாளிகள் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். காத்திரமான பல படைப்புகள் இச்சஞ்சிகையில் வெளிவந்தன. சமகால அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு விடயங்கள் சார்ந்து சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்திலான ஆக்கங்கள் பலவும் இந்த இதழ்களில் வெளிவந்தன. அத்துடன் புதுவசந்தம் இதழ்கள் வருடாந்த சிறப்பு மலர்களாக வெளிவந்துள்ளன. பல்வேறு ஆக்கங்களையும் உள்ளடக்கிய கனதியான மலராக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த இதழ் 1973இல் ஆரம்பிக்கப்பட்டாலும் அது தொடர்ச்சியற்று, பின் 2000களில் ஆண்டு மலர்களாக வெளிவந்தது.

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் ஆரம்பிக்கப்பட்டு, சமகாலத்தில் பேசுபொருளாகவுள்ள விடயங்கள் பற்றி விடய அறிவுள்ளவர்களை அழைத்து கருத்துரைகள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முழுமதி தினத்தை மையமாக வைத்து மாதாந்தம் இந்தக் கருத்தமர்வு நடைபெறுவது வழமை. ஆரம்பத்தில் பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வுகள் பின்னர் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை அலுவலகத்தில் நடைபெறுகின்றன. 2011, 2012ஆம் ஆண்டுகளில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல் குறிப்புகள் பிரசுரங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தேசிய கலை இலக்கியப் பேரவை 50 வருடங்களை நிறைவு செய்வதையொட்டி பல்வேறு பிரதேசங்களிலும் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பிலான புத்தக அரங்க விழாக்கள் நடைபெற்று வருகின்றன. பிரதேசத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், அரங்கு சார்ந்த ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் மூன்று தினங்கள், இரண்டு தினங்கள் கொண்டதாக இந்த நிகழ்வுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா மல்லாகம் மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது. இந்த வாரம் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது. பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாதாந்த ஆய்வரங்குகளும் நடைபெற்று வருகின்றன. ஈழத்து அரங்கு, நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம் முதலான பல்வேறு கலை இலக்கிய விடயங்கள் சார்ந்து இந்த ஆய்வரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஈழத்தின் கலை இலக்கிய சமூக மேம்பாட்டுக்கான காத்திரமான திசைவழியில் தேசிய கலை இலக்கியப் பேரவை பயணித்து, சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அதன் வரலாற்றுப் பாத்திரம் பெரியது. அது 50 ஆவது ஆண்டை நிறைவு செய்வது கூட சமூக மாற்றத்துக்கான வேலைத் திட்டங்களுடனேயே நினைவுகூரப்படுவது முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org